விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 12 | ராபி ஆகி 14 | இதழ் 320

யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 27-12-1985

## அடகுவைத்தோர் சங்கம் மறியல் போராட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள மக்கள் வங்கிக்கிளைகளின் முன்பாக நகைகள் 'அடகு வைத்தோர் சங்கம்' இன்று மேற்கொள்ளவிருந்த மறியல் போராட்டம் மறுஅறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, நகை விநியோகம்சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் இன்று இறுதி முடிவு எடுக்கவிருப்பதாலும், மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. க. கணேசசுந்

(5ம் பக்கம் பார்க்க)

## குமரபுரத்தில் பலத்தசோதனை

[கிளிநொச்சி]

பரந்தன் குமரபுரம் கிராமம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த சோதனை நடந்தது. இச்சம்பவத்தின்போது சிலர் காயமடைந்தனர்,

# அகதி முகாம்கள் உடனடியாக மூடப்படமாட்டாது!

# நிவாரண உதவிகள் கிடைக்கும்!

## செல்லச்சாமி கோரிக்கை மீது ஜனாதிபதி நடவடிக்கை

[பி. ராஜரட்ணம்]

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு அகதி முகாம்கள் உடனடியாக மூடப்படமாட்டாது. இந்த முகாம்களிலுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் தொடர்ந்து கிடைக்கும்.**

**இது சம்பந்தமான பணிப்புரையை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வழங்கியுள்ளார்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதி முகாம்களை இம்மாதம் முப்பத்தோராம் திகதியுடன் மூடுவதென்றும், நிவாரண உதவிகளை நிறுத்துவதென்றும் அரசாங்கம் முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

இத்துடன், அகதிகளை சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்புமாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அதிபர்களை அரசாங்கம் கேட்டிருந்தது.

அகதிகள் பிரச்னை சம்பந்தமாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இ. தொ. காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமி நேற்றுச் சந்தித்து ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்தே மேற்படி தற்காலிக

(5ம் பக்கம் பார்க்க)

## 3 வர்த்தகர்களை காணவில்லை!

(காத்தான்குடி)

காத்தான்குடி பாலையடி வட்டையைச் சேர்ந்த மூன்று பிரபல வர்த்தகர்கள் காணாமல் போய்விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து இப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 22ம் திகதி காணாமல் போன மூன்று வர்த்தகர்களையும் கண்டுபிடிப்பதில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, (ய-ரா

## யாழ்தேவி 2 மணி தாமதம்

(யாழ்ப்பாணம்)

'யாழ்தேவி' நேற்று சுமார் இரண்டு மணி நேரம் தாமத

(5-ம் பக்கம் பார்க்க)

## எல்லைக் காந்தியை ராஜீவ் வரவேற்றார்

(புதுடில்லி)

'எல்லைக்காந்தி' என்று வர்ணிக்கப்படும் கான் அப்துல் கபார்கான் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

பம்பாயில் இன்று நடைபெறும் காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருக்கும் அவரை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி விமான நிலையத்தில் வரவேற்றார். (ரா)

## பஸ் மீது துப்பாக்கிப்பிரயோகம்! சாரதியின் சாதுரியம்; ஒருவர் காயம்!

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியாருக்குச்சொந்தமான பிரயாணிகள் பஸ்ஸை நோக்கி குண்டர் கோஷ்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், பிரயாணி ஒருவர் காயமடைந்தார். சாரதியின் சாதுரியத்தால் பிரயாணிகள் உயிராபத்து எதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

நேற்று முன்தினமிரவு சிலாபத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

## சூட்கேஸுகள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ரயில்நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட இரு சூட்கேஸ் பெட்டிகளையும் நேற்று உரியவர்கள், யாழ். ரயில்நிலைய அதிபரிடம் பெற்றுக்கொண்டனர். (க)

## விஞ்ஞான அணுகுமுறை மூலம் இனப் பிரச்னைக்கு தீர்வுகாணவேண்டும்''

### தமிழக அமைச்சர் கருத்து

(சென்னை)

,,சிங்கள இனவாதம், பௌத்த தீவிரவாதம், சிங்கள மொழிவெறி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட விஞ்ஞான அணுகுமுறை மூலம் இனப் பிரச்னைக்கு தீர்வு ஒன்றினைக் காண இலங்கை அரசு முன்வர வேண்டும்'' என்று தமிழ்நாடு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் வற்புறுத்தியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற 44வது அகில இந்திய அரசியல் விஞ்ஞான மாநாட்டில் ''பாரதமும் இலங்கையில் தமிழர்களும்'' என்ற கட்டுரை

(5-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ராஜீவ் முடிவு: கூட்டணி, ஈரோஸ் வரவேற்பு

(சென்னை)

''மலையகத் தமிழ் மக்களின் பிரச்னை, ஈழம் வாழ் தமிழ்மக்களின் பிரச்னைகளுடன் பின்னிப் பிணைந்த ஒன்று என்பதை இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் நிலை தெளிவாக்கியுள்ளது'' என்று ஈழம் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழ்

(5-ம் பக்கம் பார்க்க)

## பதற்றமும் பரபரப்பும்! விமர்சகர்கள் கருத்து இது

(புதுடில்லி)

இந்தியக்குடியுரிமை பெற்ற சுமார் 85.000 இந்திய வம்சாவழி மக்களையும் இந்தியா ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக பிரதமர் திரு. ராஜீவ்காந்தி விடுத்திருக்கும்நிபந்தனை பற்றி இந்திய அரசியல் விமர்சகர்கள் பல்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர்.

''பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் திடீர் முடிவு அரசு பட்டத்தில் ஒருவித பதற்ற நிலையையும், இந்தியத் தமிழ் மக்கள் மத்தியில் பரபரப்பான ஒரு வெற்றியும் பெற்றுள்ளது'' என்பதே அரசியல் விமர்சகர்களின் பொதுவான கருத்து ஆகும்.

## 25 பேர் இன்று விடுதலை?

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பவர்களில் சுமார் இருபத்தைந்து பேர் இன்று விடுதலை செய்யப்படலாம் எனத் தெரிய வருகிறது.

பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்போர் மீதான விசாரணைகள் முடிந்ததாகவும் அறியப்படுகிறது.

## இ. தொ. கா. அலுவலகம் முற்றுகை!

# ஜனாதிபதி பணிப்பின் மீது கைதானவர் விடுதலை

(வவுனியா)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வடபிராந்தியக் காரியாலயம் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டு கடும் சோதனைக்குள்ளானது.

இச்சோதனையின் போது அலுவலகத்துள்ளிருந்து தஸ்தாவேஜுகள் அடங்கிய முழு பைல்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதுடன் அங்கு அன்றிரவு தங்கியிருந்த இ. தொ. கா. வின் கிராமியத் தலைவரும் கைதுசெய்யப்பட்டார்.

இ தொ. காங்கிரஸின் வடபிராந்தியப் பொறுப்பாளரை அழைத்து வரும்படிஅங்கிருந்த அலுவலகக் காவலாளியான இரணியன் என்பவரிடம் இராணுவத்தினர் எச்சரித்துவிட்டும் சென்றார்களாம்.

(5ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## தேவை

பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதற்கு மகளிர் தேவை. அனுபவமுள்ளவர்கள் 1-1-86 க்கு முன் விண்ணப்பம் செய்யவும்: உரிமையாளர், சேக்கிள் சென்ரர், பிரதான வீதி, சங்கானை. 2507

யாழ்ப்பாணம் நவீனசந்தையில் அமைந்திருக்கும் தரன் ஸ்ரூடியோவில் கடமையாற்றுவதற்கு பெண் காசாளரும்; பெண் பயிற்சியாளர்களுக்கும் வெற்றிடமுண்டு. யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. தரன் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். போன்: 23858
2557

மு. க. முத்துக்குமார்
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

பின்முற்றுகும் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

துன்னாலை வடக்கு ஏகாம்பரம் சிவலோகநாதன் பெண் செல்வமணி என்பவரது மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்:

— மரணமெய்தியவர்

ஏகாம்பரம் சிவலோகநாதன்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

— மனுதார்

வழ. இல,
மரணசாதன
நியாயாதிக்கம்: 1237

எதிர்

(1) சிதம்பரநாதன் மயில்வாகனம்.
(2) மயில்வாகனம் செல்வராசா.
(3) மயில்வாகனம் சிதம்பரநாதன்.

மூவரும் துன்னாலை வடக்கு, கரவெட்டி.

— எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம். காண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக ஷெ நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனவே அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் திகதி காலை 9-30 மணிக்கு இம் மன்றின்முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்டபின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றை தெரிவித்துகொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி
ஒப்பம்:
ச. நடராசா
பதிவாளர்;

வரைவு;
ஒப்பம்:
மு. க. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி:
(2609)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## தேவை

பிரபல பார்மசிக்கு நல்ல அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. நல்ல அனுபவம் இருந்தால் மட்டும் உடன் விண்ணப்பிக்கவும். யாழ்நகருக்குள் இருப்பின் விரும்பத்தக்கது. C/o ஈழநாடு, விளம்பர இல. 2640, யாழ்ப்பாணம். (2640)

இரண்டு காலப் பூசைக் கோவிலுக்கு பூசகர் தேவை. இருப்பிட வசதியும் தகுந்த சம்பளமும் அளிக்கப்படும் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். முகவரி: அறங்காவலர், வாலையம்மன் கோவில், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
(2639)

தமிழ் ரைப்பிங்கும் அக்கவுன்சும் செய்யவல்ல ஓய்வுபெற்ற முதலாந்தர ஆங்கில சுருக்கெழுத்தாளருக்கு வேலை தேவை. விளம்பர இல. 2576, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
2576

## விற்பனைக்கு

மலிவு விற்பனை சாப்பாடு மேசை கதிரைகள், Canvas Easy Chairs, Stools, T. V. Stands, Ready Made நிலை கதவுகள்: United Engineers Carpentry Work Shop, சாயிமர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
2582

### "நொக்கவுட்" உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாரதி சனசமூகநிலையத்தின் ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் நடாத்தும் ஏழு பேர் கொண்ட "நொக்கவுட்" உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சென்ற 2-ந் திகதி முதல் கோண்டாவில் 'வார்க்கஸ்' விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்போட்டியில் யாழ் மாவட்டத்திலுள்ள முப்பத்திரண்டு விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றுகின்றன.
(ஐ)

### நாளை நடக்கும் ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள நலன்புரி ஒன்றியத்தினரின் ஆதரவில் நாளை ஒளிவிழா சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது.

நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும் ஒளிவிழாவில் கௌரவவிருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கலந்து கொள்வார்.

ஆரம்ப ஜெபத்தை நல்லூர் பரி. யாக்கோபு ஆலய வணக்கத்துக்குரிய சாம். டி. ஷொர்சிங்டனும், ஆசீர்வாத ஜெபத்தை யாழ். மறைமாவட்டப் பொதுச் செயலர் அருட் திரு. ஜே. பி. ஈ. செல்வராசாவும் செய்வார்கள்.

கீதங்கள், நாடகங்கள், சிந்தனை விருந்துகள் இவ்விழாவில் இடம்பெறும். (ஐ)

## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். மலிவு விலையில் உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இன்டஸ்ரியஸ் லிமிட்டெட்**

தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**

86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(2485) தொலைபேசி: 22330

## நினைவஞ்சலி

### அமரர் மு. வேலாயுதம்



எமது குடும்ப ஒளிவிளக்காய் ஒளிவீசி எம்மோடு வாழ்ந்ததை ஒரு பொற்கனவாக்கி விட்டுத் திடீரென எம்மைத் துன்பக் கடலில் மிதக்கவிட்டு விண்ணுலகு சென்று விட்டீர்கள். நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எமது மனதை விட்டகலாது.

உங்கள் நினைவால் துயருறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.
இருபாலை, கிழக்கு. ( 641)

## 2-வது நினைவஞ்சலி

### அமரர் இ. புவனேந்திரன்

தோற்றம்:
16-04-1952

மறைவு:
27-12-1983



அன்புடன் நினைவு கூர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரர்கள், மாமாமார்,
மாமிமார், நண்பர்கள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். 2579

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா

(கணக்காளர்-லண்டன்)

அன்னையின் மடியில்:
28-12-1950

ஆண்டவன் அணைப்பில்:
28-11-1985



என்றும் எங்கள் மனதை விட்டகலாத அன்புச் செல்வமே, உனது அன்பு முகத்தைப் பாராமலே எங்களிடமிருந்து எதிர்பாராமல் பிரிந்துவிட்டாய். உன்னுடைய இனிய நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டகலாது. காலனின் கொடுமை இவ்வளவு சீக்கிரம் வரும் என்று நினைக்கவில்லை. உன்னைக் காண எதிர்பார்த்து ஏங்கி ஏமாந்த இதயங்களுடன் உனது பிரிவால் வாடி உன்னை வேதனையுடன் நினைவுகூரும் உனது,

மனைவி, மகன், சகோதரர், சகோதரியர்,
மைத்துனர்மார், மைத்துனிமார், மாமன்,
மாமி, மருமக்கள், பெருமக்கள், உற்றார்,
உறவினர். நண்பர்கள்.

'லக்ஷ்மி வாசம்' கித்துள் றேட்,
குடியிருப்பு, வவுனியா. 2624

### 'சத்தியா' நூல்நிலையம்

(உடுவில்)

உடுவில் தெற்கு சத்தியபுரம் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தனரால் தங்கள் சிற்றாலய வளவில் குழந்தைகளின் கல்வி நலன் கருதி சத்திய நூல் நிலையம் என்ற பெயரில் நூலகம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

### சீருடைகள் வழங்கப்பட்டன

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு 1985-ம் ஆண்டிற்கான உத்தியோகபூர்வ சீருடைகள் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சீருடைகளை அலுவலக அதிகாரிகள் கொழும்பிலிருந்து லொறி மூலம் கொண்டுவந்து விநியோகம் செய்துள்ளனர்.

### ஒளிவிழா

(ஊரெழு)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தின் கிறிஸ்தவ ஒன்றியம் இன்று வெள்ளிக்கிழமை நத்தார் கூட்டு ஆராதனையுடன் ஒளிவிழாவையும் நடாத்துகிறது.

காலை மேற்படி நிறுவனத்தின் வளவுக்குள் ஆரம்பமாகவிருக்கும் இந்த ஒளிவிழாவில் கரோல் இசைநிகழ்ச்சி, நடனம், மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகளுடன் "அன்புக் காணிக்கை" என்ற வில்லிசையும் இடம்பெறவிருக்கிறது.

### வெடியரசன் நூல் வெளியிட முடிவு

(சுழிபுரம்)

தொல்புரம் மக்கள் வெடியரசன் சரித்திர வரலாற்று நாடக நூல் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

தொல்புரம் ஆதிமுத்து மாரியம்மன் இந்து இளைஞர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

### பாவனையாளர் சங்கம் உதயம்

[தெல்லிப்பழை]

கட்டுவன் பகுதியில் பாவனையாளர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சங்க நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் திரு. எஸ். சின்னத்தம்பி, செயலாளர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி, உப தலைவர் திரு. செ. சோமலிங்கம், உப செயலாளர் திரு. எஸ். ராஜேந்திரம், பொருளாளர் திரு. வே. தங்கராசா. மேலும் 6 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
[மா]

### வட்டு விளையாட்டுக்கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் வட்டுக்கோட்டைவிளையாட்டுக்கழகத்திற்கும் யாழ். முஸ்லீம் லீக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட மோதலில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் முஸ்லீம் லீக் கழகத்தை 4 - 2 என்ற கோல்களால் தோற்கடித்தது.

இப்போட்டி கடந்த திங்கட்கிழமை அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது, (ச)

# பாகிஸ்தானில் 200 பேர்கைது!

## 20 பேர் பெண்கள்;

[கராச்சி]

பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று 20பெண்கள் உட்பட சுமார் 200 பேர் பொலிசாரினுல் கைதுசெய்யப் செய்யப்பட்டனர்.

உலகச் செய்திகள்

லாகூரில் எதிர்க்கட்சிகளின் ஊர்வலங்களைக் கலைத்தபொலிஸார், தடியடிப் பிரயோகமும் கண்ணீர் வாயுப் பிரயோகமும் செய்தனர்.

பாகிஸ்தான் அரசு அதிகாரி ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில் லாகூரிலும்ராவல்பிண்டியிலும் எதிர்க்கட்சிக்கூட்டங்கள் நடத்தத் தடைவிதிக்கப் பட்டுள்ளதாகக் கூறினர்.

அதேநரத்தில் ஜனநாயக விரோதமான இந்த நடவடிக்கையை தாம் மீறப்போவதாக, பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீட்கும் இயக்கத்தில் அங்கம் வகிக்கும் பதினொரு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் விரைவில் நீக்கப்படும் என்று கூறிய பாகிஸ்தான் பிரதமர் மொகமட் கான் அதற்கான திகதிபற்றிக் குறிப்பிடப் படவில்லை. (செ)

## இப்படியும் நடந்தது

[கலிபோர்ணியா]

இயந்திரத்தின் உதவியுடன தந்தை உயிர்வாழ்வதை சகிக்காத மைந்தன், தந்தையையே கொன்றுவிட்டான்!

கலிபோர்ணியா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலையில் இச்சம்பவம் நடந்துள்ளது.

எட்வர்ட் பேக்கர் என்பவர் புற்றுநோயினுல் கடுமையாகப்பாதிக்கப்பட்டு,வைத்தியசாலையில் ஓர் அறையில் உயிர்வாழ்வு இயக்கத்துக்கு உதவும் இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில் இருந்தார்.

தந்தையின் நிலையைச் காணச் சகிக்காத அவரது மைந்தன்; அறைக்குள் புகுந்து தந்தையைக் சவனித்து வந்த நர்ஸின் கழுத்தில் துப்பாக்கியைவைத்து, இயந்திரத்தை தனது தந்தையின் உடலிலிருந்து கழற்றினர்! இதன் எதிரொலி? இயந்திரத் துணை இல்லாத தந்தை இறந்துவிட்டார். [கெ]

# ஒளிகிடைத்தும் வழிகிடைக்கவில்லை!

[பண்டத்தரிப்பு]

சில்லாலையில் ஆறு லட்ச ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் புதிய உப மின் நிலையத்திற்குபிரதான மின்வழியைய் ஏற்படுத்துவதற்குத் தங்கள் காணிக்குள் மின்சாரக் கம்பங்களை நாட்டவேண்டாம் என்று சில்லாலை கிழக்கைச் சேர்ந்த சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகச் கூறப்படுகின்றது.

இதனுல் உப மின்சாரநிலைய வேலைகள் யாவும் செயற்படமுடியாது ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்து.

சில்லாலைப் பகுதியில் மங்கிய ஒளியில் நீண்டகாலமாக மின்சாரம் வருவதாலும், புதிய மின் இணைப்புக்களை மேற்கொள்ளமுடியாது இருப்பதாலும் மின்பற்ருக்குறையை நீக்குவதற்கு ஒரு உப மின் நிலையம் நிறுவப்படவேண்டும் என்றும் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம், சில்லாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட மற்றும் பொதுநல இயக்கங்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் சிபார்சின் பிரகாரம் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை ஆறு லட்சம் ரூபாவை இதற்கென ஒதுக்கியிருந்தது. அநுராதபுரம் பிராந்திய மின்சார சபை அலுவலகத்திலிருந்து மிகுந்த சிரமத்தின்பேரில் 'டிரான்ஸ்போமர்' சாதனங்களும் இந்த உப மின் நிலையத்திற்காக இங்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இந்நிலையில்; உப மின் நிலயதிற்குப் பிரதான மின் வழியிலிருந்து மின் இணைப்புச் செய்வதற்கு மின் கம்பங்கள் நாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது சில்லாலை கிழக்கைச் சேர்ந்தபக்களில் சிலர் தங்கள் வளவுகளுக்கு ஊடாக மின்வழிக் கம்பிகள் கொண்டு போகக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக அறியப்படுகின்றது.

பிரதான மின்வழிக் கம்பிகள் தங்கள் வளவுகளுக்கு ஊடாகச் செல்வதால் தமக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் பனைகள் தறிக்க வேண்டிவரும் என்றும்இவர்கள் கூறிஅண்மை

(-ம் பக்கம் பார்க்க)

# மிஸோ தேசியமுன்னணியுடன் ராஜீவ் உடன்பாடு

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி விரைவில் மற்றுமொரு சமாதான உடன் படிக்கையில் கைச்சாத்திடவுள்ளார்.

இந்திய மிஸோ தேசிய முன்னணியுடன் அவர் ஒப்பந்தம் செய்யவுள்ளார்.

இந்தியாவின் வட கிழக்கு எல்லைப் பிரதேசமான மிஸோரம் மாநிலத்தில் தனிநாட்டுப் போராட்டம் ஒன்றை இவ்வியக்கம் கடந்த 19வருடங்களாக நடத்தி வருகின்றது.

புதுடில்லி அதிகாரிகள் இந்த இயக்கத்தின் தலைவரான திரு. லால்டெங்காவுடன் இது தொடர்பாசப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர். மிஸோரம் பிரதேசம் இந்தியாவின் பர்மா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனன எல்லைப்பிரதேசம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. [செ]

## அபிராமி அந்தாதி பாட்டும் பயனும்

(சுழிபுரம்)

சுழிபுரம் வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் இம்மாத இறுதியில் அபிராமி அந்தாதி பாட்டும் பயனும்' நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்குசெய்துள்ளனர். வழக்கம்பரை அம்மன் கோவிலில் இந்நிகழ்ச்சி இடம்பெறும்.

# ஆரம்ப சுகாதார குழுக்கள்:

## சுகாதார வைத்திய அதிகாரி விளக்கம்

[வண்ணார்பண்ணை]

''நோய்கள் மனிதனைப் பலமாகப்பற்றியபின் அந்த நோயிலிருந்து விடுபட அதிக பணத்தையும், காலத்தையும் செலவு செய்வதைவிட,நோய்வருமுன் குறைந்தசெலவில் மிக எளிதானமுறையில்அதைத்தடுத்துவிடுவதே சிறந்ததும், பயனுள்ளதுமாகும். இந்த நோக்கம் பூரணமாக செயல்படவே ஆரம்ப சுகாதாரக் குழுக்கள் மக்கள் மத்தியில் நிறுவப்படுகின்றன.''

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் ஆரம்ப சுகாதாரக் குழுக்களின் மீளாய்வுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழைஅரசினர்வைத்தியசாலைப் புற்றுநோய்ப்பகுதி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காங்கேசன் துறை சுகாதார அத்தியட்சகர் பிரிவு ஆரம்ப சுகாதாரக்குழுக்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; பல பகுதிகளில் வைத்திய உத்தியோகத்தர்கள் மிகவும் குறைவாக இருக்கின்றனர். இதனுல் நோயாளர்கள் பல விதத்தில் பாதிக்கப்பட்டுவருகின்றனர். நோயாளர் தொகைக்கேற்ப இன்று வைத்தியர்கள் இல்லை. இந்நிலையில் நோயாளர்களையும், நோய்ளுக்கு ஆளாகும் மக்களையும் காப்பாற்றுதெற்காக கிராமியமட்டத்தில் ஆரம்ப சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்பணியைச் சேவை உணர்வுடன் புனிதமாகச் செய்வது மிகவும் அவசியமாகும்'' என்ருர்.

இணுவில் சமாதானக்குழுத் தலைவரும், ஆரம்ப சுகாதாரக் குழுப் பிரதிநிதியும்,இந்துஇளைஞர் பேரவைத் தலைவருமான திரு. தி. சி சண்முகலிங்கம் பேசுகையில்; ''வைத்தியப் பணி ஒரு தெய்வீகப்பணியாகும். மக்களை நாடிச்சென்று வதாண்டாற்றும் தனிச்சிறப்பு வாய்ந்தபணி இக்குழுக்களுக்கு இருக்கின்றன. வைத்தியரைத் தேடி நோயாளிசெல்வது ஒரு வழக்கமாக இருந்துவந்தபோதும், நோயைத் தடுக்கும் பணியேஇக்குழுக்களின்முக்கிய பணியாகஉள்ளது.இதனுல் மக்களைத் தேடிச்சென்று தொண்டாற்றும் நிலைஇக்குழுக்களுக்கு இருக்கின்றது. புனிதமான இச் சேவையில் பயிற்சி பெற்ற தொண்டர்கள் தெய்வத் தொண்டாக இதைக் கணிப்பதுடன் தம்மை மக்கள் சேவையாளர்களாகவும் கணிக்கவேண்டும். இச்சேவையில் ஈடுபடும் பயிற்றப்பட்ட தொண்டர்களுக்கு சுகாதார சேவையில் நியமனங்கள் வழங்கப்படும்போது முன்னுரிமை வழங்கப்படுவது மிக அவசியமானதொன்ருகும். இதை ஒரு கொள்கையாக சுகாதார இலாகா நடைமுறைப்படுத்துவதன் மூலம் இச்சேவையை மேலும் வலுவடையச்செய்ய முடியும்'' என்ருர்.

# ஐக்கிய அகாலிதள்: 74 பேர் விலகினர்!

[சண்டிகார்]

ஐக்கிய அகாலிதளின் தலைவர் திரு. ஜோகிந்தர் சிங் சர்வாதிகாரமான முறையில் நடந்துகொள்கிருர் என்று குற்றஞ்சாட்டி அக்கட்சியிலிருந்து 74 மூத்த உறுப்பினர்கள் விலகியுள்ளனர்!

இவர்கள் இப்போது பஞ்சாபில் ஆட்சி அமைத்திருக்கும் அகாலிதள்ளுடன் சேர்ந்துள்ளனர் என்று கட்சித்தலைவர் திரு. பர்னுலா நேற்று தெரிவித்தார்.

அகாலிதள்ளின் எல்லாப்பிரிவுகளும் ஒன்றுசேரவேண்டும் என்று அண்மையில் திரு. பர்னுலா கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## நாளை நடக்கும் கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

அகில உலக அருள்நெறி மன்றத்தின் ஆதரவில் அமரர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களின் முதலாவது ஆண்டு சிரார்த்ததினக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் சங்கானை டட்டின பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. சோ. க. வேலாயுதர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் க அருணுசலம் யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி க. சந்திரராசா, வித்துவான் மு. சபாரத்தினம், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

## "பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டும்"

(கெய்ரோ)

எகிப்திய ஜனுதிபதி ஜனுப் ஹொஸ்னி முபாரக், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேலை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

ஜனுப் முபாரக் தொலைக்காட்சிப் பேட்டியொன்றிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் இரண்டு மாதங்களுக்குள் இஸ்ரேலை அங்கீகரிக்காவிட்டால் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இல்லாமல்நடைபெறும் என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜனுப் அரபாத் ஐ நா பிரேரணை இலக்கம் 242 ஐ அங்கீகரிக்காவிட்டால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடையும்'' என்றும் அவர் கூறினர்.

இப்பிரேரணை '67 யுத்தத்தில்[ஆறு நாள்] இஸ்ரேலை அரபு நாடுகளிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை மீள அளிக்கும்படியும், இப்பிராந்தியத்தில் உள்ள சகல நாடுகளும் [இஸ்ரேல் உட்பட) நிலைத்திருக்கும் உரிமையையும் கோருகிறது. எனினுங் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இப்பிரேரணையை நிராகரித்துள்ளது. [செ]

## முகாமுக்கு அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். சங்கிலியன் அகதிகள் முகாமுக்கு யாழ்ப்பாணம் புகையிரத ஊழியர்கள் இரண்டு மூடை அரிசி, ஒரு மூடை மாவு, மற்றும் சீனி மரக்கறி வகைகளை அன்பளிப்புச் செய்தனர்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் குழந்தைகளுக்குரிய லக்டோஜன், நெஸ்பிறே, அங்கர் பால்மா வகைகளையும், முப்பது மீட்டர் சீத்தைத் துணிகளையும் இம்முகாமுக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர் [ஐ]

# போதைஏறியகரடி

## கண்ணை முடிவிட்டது!

(வாஷிங்டன்)

அதிக அளவில் போதை வஸ்து உட்கொண்ட கரடி ஒன்று கண்ணை மூடிவிட்டது!

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள மலைப் பிரதேசத்தில் நடந்துள்ள இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

விமானமொன்றிலிருந்து வீசப்பட்ட ஒரு பையைக் கண்ட இக்கரடி டையைக் கிழித்து அதிலிருந்த 'கொகேய்ன்' என்னும் போதைவஸ்த்தைச் சாப்பிட்டது.

இப்பையிலிருந்த 'தகாகேய்னின் நிறை 75 இருந்தல். இதன் மதிப்பு சுமார் 34 'மில்லியன்' டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கரடி எவ்வளவு போதை வஸ்தை உண்டது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை. (செ)

## மணிவாக்கு

மனிதன் பிறக்கும்பொழுது சுதந்திரம் உள்ளவனுகத்தான் பிறக்கிருன். ஆனுல் எங்கே நோக்கினும் அவன் அடிமைத்தளைகளில் பிணைக்கப்பட்டவனுகவே காட்சியளிக்கிருன். ஒவ்வொரு மனிதனும் தான் மற்றவர்களுக்கு எஜமானன் என்று நினைத்துக்கொண்டிருக்கிருன்; ஆனுல் அப்படி நினைப்பவன் தான் மற்ற எல்லோரையும்விடப் பெரிய அடிமையாகவும் கிடக்கிருன்.

— ரூசோ.

## நமது நோக்கு

# ஏன் ஐயா, இந்த அவசரம்?

இலங்கையில் நடைபெற்றுவரும் அட்டூழியங்களை ''லங்கா புவத்'' போன்ற அரசசார்பு செய்திமுகவர் ஸ்தாபனங்கள் என்னதான் பூசிமெழுகி திரித்து வெளியிட்டு மறைத்துவிட முயன்ருலும் உலகம் குறிப்பாக அண்டை நாடான இந்தியா விழித்துக்கொண்டுதான் இருக்கின்றது என்பதை இந்திய பிரதமமந்திரி திரு. ராஜீவ் காந்தி சில தினங்களுக்கு முன் வெளியிட்டுள்ள கருத்து தெளிவுபடுத்தியுள்ளது.

''பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்பது ஒருவிடயம், ஆனுல் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஏராளமான மக்களைப் பழிவாங்குவது என்பது இன்னெரு விடயம்'' என்று திரு. காந்தி குறிப்பிட்டுள்ளார்.

1983ல் தமிழ்ப் போராளிகள் ராணுவத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து அச்சம்பவம் இடம்பெற்ற இடத்தைச் சுற்றிய பகுதிகள் ராணுவத்தினரின் பெரும் அட்டூழியத்துக்குள்ளானது ஒருபுறமிருக்க நாடு முழுவதிலுமே தமிழ் இனத்தவர்கள் - யாழ்ப்பாணத்தவர்- கிழக்கிலங்கையர்- மலையகத்தவர் என்ற பாகுபாடின்றி சிங்கள குண்டர்களின் இனவெறியாட்டத்துக்கு இலக்கானுர்கள். அரச பாதுகாப்பிலிருந்த 53 இளம் கைதிகள் அடித்தும், வெட்டியும், குத்திக்குதறியும் கொலை செய்யப்பட்டார்கள். மலையகத்திலிருந்து ஆயிரக்கணக்கானேர் பாதுகாப்புத் தேடி வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு ஓடினுர்கள். இவ்வாறு ஓடியவர்களில் பெரும் பகுதியினர் இந்திய இனத்தவர்கள் என்பதால் இந்தியாவில் பெரும் அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டது. இந்திய மத்திய அரசு உடனடியாகவே இலங்கை ஜனுதிபதியுடன் தொடர்பு கொண்டது. சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை இங்கு அனுப்பியது. இவ்வாறு பல்வேறு மட்டங்களில் இலங்கையின் இனப் பிரச்னைக்கு ஒரு அரசியல்தீர்வினை உருவாக்கிக்கொள்வதற்கு உதவ இந்தியா முயன்றுகொண்டிருந்த வேளையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரின் அகால மரணம் நிகழ்ந்தது.

அதன்பிறகு புதிய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் விடயத்தைப் புதிய கோணத்தில் அணுகிவந்தமையும்நாம் அறிவோம்.

இதேவேளை, ஆயுதப்படைகளிலுள்ள சிங்கள இளைஞர்கள் தமிழ்ப் போராளிகளின் தாக்குதல்களுக்குள்ளாகும்போது தென்பகுதியில் சிங்கள இனத்தவர்கள் வெகுண்டெழுந்து அங்குள்ள தமிழர்களைத் தாக்காதவிதத்தில் இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

எங்கே தாக்குதல் நடைபெறுகின்றதோ அங்கேயே தமிழர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதுபோல் ஆயுதப்படையினர் அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்ருெழிப்பதும், வீடு, வாசல்களை நாசமாக்குவதும் வழக்கமாக்கிக்கொண்டு விட்டனர்.

''ஒரு ராணுவ சிப்பாய் கொல்லப்பட்டால் ஐந்து பயங்கரவாதிகள் அழிக்கப்படுகிருர்கள்'' என அமைச்சர் ஒருவர் விகிதாசார ரீதியில் விளக்கமளித்தார்.

இந்தவிதமான ''போர்த்தந்திரத்தை'' தென்னிலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்களோ இல்லையோ தமிழ்ப்பகுதிகளில் ஆயுதப்படையினர் கொல்லப்பட்டால் தென்னிலங்கையில் சாதாரணத் தமிழர் கொல்லப்படுவது பெரும்பாலும் நின்றுவிட்டது எனலாம்.

இந்தப் பின்னணியைக் கருத்தில்வைத்துக்கொண்டு மலையகத்தில் இன்று தோன்றியுள்ள நிலைமையை அவதானிக்கும் போதுதான் இலங்கை அரசாங்கம் அவசர அவசரமாக இந்தியக் குடியுரிமைக்குத் தகுதியுள்ள மலையக் தமிழர்களில் 84 ஆயிரம் பேரை விமானத்தில் அனுப்பி வைப்பதற்கு திட்டமிட்டுவருவதையும், அவ்வாறு அனுப்பப்படுபவர்களை இந்தியா ஏற்க முடியாது என திரு. ராஜீவ் காந்தி மறுதலித்திருப்பதையும் சரியாகப் புரிந்துகொள்ளமுடியும்.

இன ரீதியிலான சட்டதிட்டங்களால் குடியுரிமை, பிரஜாவுரிமை மற்றும் சமூக அந்தஸ்தையெல்லாம் இழந்துநிற்கும் மலையகத்தவர்கள் அவைகளைத் திரும்பப் பெறுவதற்கு பலவாறும் முயற்சி செய்துகளைத்துவிட்டதின் பின்னர் தமது சூழ்நிலைக்கும் வசதிக்கும் ஏற்ப சாத்வீகமானதொரு போராட்டத்தினை நடத்துவதற்கு முஸ்தீபு செய்துவரும் வேளையில் அவர்களில் ஒரு பெரும் பகுதியினரை அவசரமாக விமானத்தில் அனுப்பி வைக்க முயல்வதின் அர்த்தம்தான் என்ன?

இந்தியக் குடியுரிமை பெற்ற அனைவரையும் அவசர அவசரமாக அனுப்பிவிட்டதின் பின் எஞ்சியிருக்கும் இந்திய வம்சாவளியினர் தமது நியாயமான உரிமைகளுக்காக நடத்தக்கூடிய போராட்டங்களுக்கும் 'மார்க்ஸீய பயங்கரவாத' இலட்சினை குத்துவது அரசின் நோக்கமா?

இ. தொ. காங்கிரஸ் மேற்கொள்ளவிருக்கும் போராட்டத்தின் காரணமாக நாட்டுக்கு மாபெரும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவது சாத்தியமே. அதனைத் தவிர்ப்பதாயின் நியாயமான அவர்களின் கோரிக்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதே வழி.

மாருக, தொடர்ந்தும் இன ரீதியிலான சிக்கல்களை ஏற்படுத்தும் முயற்சிகளிலேயே கவனத்தைச்செலுத்துவதாயின் அதனுல் எவரும் நற்பயனடையப் போவதில்லை.

# 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக'

## எஸ். ஐ. தனபாலசிங்கம்

அன்பு வள்ளல் மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் இன்பத்தேன்; தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்குந்தேன், சிவப்பிரகாசரும்இராமலிங்கசுவாமிகளும் பருகித் தம் அனுபவத்தால் வியந்துகூறும் செந்தமிழ்த்தேன்; ''கண்டாய் திருவாதவூராளும்தேன்'' என உய்யவந்ததேவன் நாயனுர் போற்றிப் புகழ்ந்த தேன். பக்திச்சுவை, தேன்சொட்டச் சொட்டப் பாடிய திருவாசகத்தைத் திருவாதவூரடிகள் எடுத்துக் கூற, தில்லைச்சிற்றம்பலமுடையார் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதிக்கொண்டுசென்று திருச்சிற்றம்பலத்துள்வைக்கப்பெற்ற பெருமையுடைத்து இத்தகையசிறப்புமிக்க திருவாசகத்தின் ஒரு பகுதியே திருவெம்பாவையும், திருப்பள்ளி யெழுச்சியுமாகும். திருவெம்பாவை இருபது பாடல்களையும் திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாடல்களையும் கொண்டவை.

திருப்பாவைபாடிய அன்னவயல் புதுவை ஸ்ரீ ஆண்டாள் பருவ வயதில் மனப்பக்குவமடைந்த நிலையில் தெய்வீகக் காதல்கொண்டவள். திருப்பாவையில் முப்பதுபாடல்கள் உள. சைவமும், வைணமும் தமிழ் மணத்துடன் தழைக்கப்பாடியதிருவாதவூரடிகளும் ஸ்ரீஆண்டாளும் பாண்டிய நாட்டுப் பேருபகாரிகளே.

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய அனைத்தும் மனிதகுலம் என்றென்றும் அருளோடு வாழ, அந்த அருள் வாழ்க்கையை விழிப்போடு உய்த்துணரவைப்பதுபோல் எம் உள்ளத்தே உறங்கிக்கிடக்கும் ஆன்மாக்களை ஆன்மீகவழிசெல்ல உறக்கத்தினின்றும் எழுப்புததே இவற்றின் தத்துவப் பொருளாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பல திருத்தலங்களுக்குச் சென்று திருவண்ணுமலைக்கு வந்தார். அப்போது மார்கழி மாதம். சித்திரை தொடங்கி பங்குனி வரையுள்ள பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவது மாதம் மார்கழிமாதமாகும். சூரியன் இக்காலத்தில் தனுர்ராசியில் சஞ்சரிப்பதால் இதனைத் 'தனுர் மாஸம்' என்றும், சூரியன் உதமாகும் பன்னிரண்டு ராசிகளில் தனுர் ராசி சிறப்பான ராசி என்றும் இதனை ஆட்சிசெய்யும் அதிபதியாகிய குரு அல்லது 'பிரகஸ்பதி' ஞானத்திக்குரிய கிரகமென்றும், இலக்கங்களிலே

திருவெம்பாவையில் சைவக் கன்னிப்பெண்கள் சக்திதேவியையும், திருப்பாவையில் வைணவக் கன்னிப் பெண்கள் ஆழி மணிவண்ணனையும் எழுப்புகிருர்கள். எல்லாப்பாடல்கள் இறுதியிலும் 'எம்பாவாய்' என விழித்துக் கூறுகின்றனர். இவற்றைப் பாவை நோன்பு எனவும், காத்யாயனி விரதம் எனவும்அனுஷ்டிப்பர். பொதுவாக மார்கழி நோன்பு எனச் சொல்லப்படும்.

தெய்வத்திருநங்கை ஆண்டாளும் அடிகளாரும் பாடிய

(7ம் பக்கம் பார்க்க)

# திருவாதவூரடிகள் புராணமும் அதன் உரைநலனும்

## பௌராணிகவித்தகர் வ. குகசர்மா

''மதிமலி சடைமுடி வரதன்'' அருள் பெற்ற அடியார்களுள் திருவாதவூரர் எனப் பிள்ளைத் திருநாமம் பெற்ற மணிவாசகரும் ஒருவர். அவர் பாடிய திருவெம்பாவைப் பாடல்களால் மார்கழி மாதத்திற்கும் அவருக்கும் தொடர்பேற்பட்டது. திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடல்கள் மார்கழி மாதம் முழுவதும் ஆலயங்களில்முழங்குவது சைவர்கள் மனதில் ஒரு புத்தெழுச்சியை உண்டாக்குவதாகும்.

திருவாதவூரரின் சரித்திரத்தை விரிவாக எடுத்துக் கூறும் நூல் திருவாதவூரடிகள் புராணமாகும்.

இந்தப் புராணம் காவிய நடைபற்றி வரும் சிருங்கார வருணனைகளும், திரிசொற்பிரயோகமுமின்றி, இயற்சொற்களினுல் சிவபக்தி மிகவுடைய கடவுண்மாமுனிவராற் இயற்றப்பெற்றது. திருவாசகம், திருக்கோவையார், விபூதி, பஞ்சாட்சரம், இவற்றை மனதில் பதியச் செய்வது.

இப்புராணம் மார்கழி மாதத்து திருவாதிரைக்கு முதலாய பத்துத்தினங்களில் ஆலயங்களில் படித்துப் பொருள் சொல்லப்படுவது. சிறுவர் புராணபாராயணம் செய்து பழகுவதற்கேற்றது.

இவ்வாருன ஒரு சிறந்த புராணத்திற்கு உரை ஒன்று வேண்டுவது அவசியமாயிற்று. இதற்குச் சுன்னுகம் குமாரசாமிப்புலவர் ஒரு சுருக்க உரை எழுதியுள்ளார். சைவசித்தாந்தப் பொருளை உட்பொருளாகக் கொண்ட திருவாதவூரடிகள் புராணத்திற்கு அந்தக் கொள்கைகளை சந்தேக விபரீதமற .விளக்கும் விருத்தியுரை வேண்டப்பட்டது,

அந்நாளில் மட்டுவிற் பதியில் வாழ்ந்த க. வேற்ப்பிள்ளை ஆசிரியர் அவர்களே அதற்குத் தகுதியானவரென அக்காலத்து அறிஞர் தீர்மானித்தனர். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர் அந்தக்காலத்திலே மிகப் பிரசித்தி பெற்றிருந்த கார்த்திகேசு உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் ஆகியோரிடம் தமிழ் படித்தவர்.

அக்காலத்தில் தமிழை விரும்பிக் கற்பவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் அவற்றிற்கு அறிஞராற் செய்யப்பட்ட உரையையும் விரும்பிப்படிப்பார்கள். விருத்தியுரை எழுதுவார்க்கு இலக்கண அறிவு இன்றியமையாதது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கு சேனுவரையர் எழுதிய 'சேனுவரையம்' என்ற உரையை வித்துவசிரோமணியிடம் பாடங் கேட்டார். அந்தக்காலத்து நச்சினுர்க்கினியர், பூரணர் போன்ற உரையாசிரியர்களின் உரையை விளங்கிக்கொள்வதற்கு ஓர் ஆசிரியரிடம் பாடங் கேட்க வேண்டும். இக்காலத்தில் பண்டைய இலக்கண நூல்களின் பெயரும்' உரையாசிரியர்கள் பெயரும், பழம் பெரும் இலக்கியங்களின் பெயரும் தமிழர்களின் மத்தியில் மெல்ல மறைந்து வருகின்றன.

உரையாசிரியர் எமது ஆசிரியர்களிடமிருந்து பாடங் கேட்ட முறையையே 'அதிகம்அறுக்சாமலும் அஞ்சி அகலாமலும் பாடங் கேட்டார்' என அவர் வரலாறு எழுதிய பண்டிதமணி அவர்கள் கூறியுள்ளார்கள். ஆசிரிய மாணவர்க்கிடையே அந்தக் காலத்து உறவு அப்படி.

திரு. க. வேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் சந்திரமௌலீசர் பதிகம், புலியூரந்தாதி உரைபோன்ற வேறுபல அரிய நூல்களை ஆக்கியிருப்பினும் திருவாதவூரர் புராணவிருத்தியுரையே அவருக்கு 'உரையாசிரியர்' என்னும் சிறப்புப் பெயரைக் கொடுத்தது. அவருக்குப் புகழைக்கொடுத்த மற்ருெரு நூல் ஈழமண்டல சதகம் என மறுபெயர் கொண்ட சந்திரமௌலீசர் பதிகமாகும்.

ஆசிரியர் வேற்பிள்ளை அவர்கள் பண்டைய உரையாசிரியரின் உரைகளைக் கூறப் பயின்ருலும், 'பரிமேலழகர் உரை,

(7-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிச்சிந்தனை

### திருவெம்பாவை

பக்திச்சுவையும்பதிலக்கணச் சிறப்பும் தருக்க சிந்தனைக்கு இடம் கொடுக்கும் நுட்பமும் மிக்க திருமுறைகளைப் பெற்றிருப்பதையிட்டு நாம் பெருமையடைய முடியாது. ஏனென்ருல் நாம் அவற்றின் பக்கமே திரும்புவதில்லை. ஆனுல்:

கரைகாண முடியாதஆழம் அறிய இயலாத அமிர்தசமுத்திரம் என்று சொல்லத்தக்க திருமுறைத் தொகுதியில் ஒரு சில பதிகங்களையாவது அநுலவித்துச் சுவைக்கும்: சிந்தித்து மகிழும் நிர்ப்பந்தம் பெற்றவர்களாயிருப்பதையிட்டு மகிழ்ச்சியடையலாம். வேயுறு தோளிபங்கன் முதல் திருப்பொற் சுண்ணம் ஈருக நாம் அதிகம் பயிலும் திருமுறைப்பதிகங்களில் திருவெம்பாவை பெற்றிருக்கும் முதன்மையும் சிறப்பும் தனித்துவமானது.

மாணிக்கரத்தினம் தன்னிறத்தாலும் ஒளியாலும் பெறுமதியாலும் மக்கள் உள்ளத்தைக் கவர்வது போலே சிவபெருமானின் இயல்பு - பக்தலட்சணம் - தீர்த்த மகிமை மூதலிய விடயங்கள் மனிதர் மனத்தைக் கவரத்தக்க விதத்தில் திருவெம்பாவையில் பல மாணிக்கவாசகங்கள்உள்ளன.

புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ - சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை - கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே- ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான் - ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் - அத்தன் ஆனந்தன் அமுதன்என்றுள் றூறித்தித்திக்கப் பேசுவாய் -தானேவந்தெம்மைத்தலையளித்தாட் கொண்டருள்தல் போன்ற மாணிக்கவாசகங்கள் அறிவுக்கண் சிறிதே வாய்க்கப் பெற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ராஜீவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சகலபாதுகாப்புடனும் நாடு திரும்பும் வரை இந்தியக் குடியுரிமை பெற்ற மலையகத் தமிழ்மக்களை ஏற்கப்போவதில்லையென்று இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கூறியதை மேற்படி அமைப்பு வரவேற்றுள்ளது.

1981ம் ஆண்டு காலாவதியான சிறிமா-சாஸ்திரி உடன்பாட்டை நீடிப்பதற்கான இலங்கையின் யோசனையை இந்தியா நிராகரித்துள்ளது சரியான முடிவு என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கூட்டணி வரவேற்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு (பொலிட் பீரோ) சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் ''சுமார் 80 ஆயிரம் இந்திய வம்சாவளி மக்களை விமான மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன கூறியுள்ளது விஷமத்தனமானசெயல்'' என்று தெரிவித்துள்ளது.

''இந்திய பிரஜா உரிமைக்கு விருப்பம் தெரிவிக்காத அனைவருக்கும் இலங்கைக்கான பிரஜா உரிமை வழங்காது ஒத்திபோடும் தந்திரோபாய செயல் இது'' என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவம் குவிக்கப்படுவது, ஏதுமறியா அப்பாவித் தமிழ்மக்கள் வகைதொகையின்றி படுகொலை செய்வது குறித்து பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் அனுதாபட் பேச்சுக்கும் அந்த அறிக்கையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா-செ)


## கடைசி நேர வரிவிளம்பரம்

### தேவை

உங்கள் வளவில் உள்ள வேம்பு, மா, தேக்கு மரங்கள் விற்க விரும்பினுல் தொடர்பு கொள்ளவும்; சாயி மர அரிவு ஆலை, 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (2645)

### WANTED

Part time/Full time job offered for Artistic Talent and Handicraft knowledge Draughtsman. Contact Engineer Ilangainathan, Sai saw mill, 91, Ramanathan Road, Kaladdy, Jaffna. [2644]

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

#### மின்தடை

85-12-29 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய பராமரிப்பு வேலை காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ். நகரிலுள்ள எல்லா இடங்களுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படும் என சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
**மின் பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.
(2646)

### எம்பயர்

7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30
கவுண்டமணி-ஊர்வசி
**"பணம் பத்தும் செய்யும்"**

### லிடோ சினிமா

10-30, 2-30, 4-30, 6-30
இலகரூனிக் சுருமீனின்
சாகசக் காட்சிகள்
நிறைந்த
JAWS III

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30
M. G. R. - ஜெயலலிதா
நம்பியார் - மனேகர்
நடித்த
**அன்னமிட்டகை**
31 முதல்
TEN BROTHERS OF SHAOLIN
(New Release)


## அடகு வைத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தரம் சில தினங்களுக்குள் நகை விநியோகம் சம்பந்தமாக சாதகமான ஒரு முடிவை தெரிவிப்பதாக எழுத்து மூலமாகத் தமக்கு உறுதிப்படுத்தியுள்ளதாலும் சில தினங்களுக்குப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக 'அடகு வைத்தோர் சங்கம்' தெரிவித்துள்ளது. (மா

## விஞ்ஞான...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யின் சாராம்சத்தை தெளிவுபடுத்துகையிலேயே அமைச்சர் இராமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

''இலங்கை இனப்பிரச்னை கடுமையான ஒன்ருக விரிவடைந்துள்ளது. இருப்பினும் இலங்கை அரசு இதனைத்தெளிவாக புரிந்து கொள்ளவில்லை. இலங்கை அரசு இதனை நன்ருகப் புரிந்து கொள்வதுடன்; இந்தப் பிரச்னையில் பழங்கால போக்கைக் கைவிட்டு நவீன விஞ்ஞான கண்ணேட்டத்தினைச் செலுத்த வேண்டும்'' என்றும் அவர் கூறினர்.

''இலங்கை அரசியல் சட்டத்தில் அடிக்கடி கொண்டு வரப்படும் திருத்தங்கள், அங்கு சுமூகமான தீர்வு ஒன்று ஏற்படுவதற்கு தடையாக அமைந்துள்ளது'' என்று கருத்து வெளியிட்ட அமைச்சர் ராமச்சந்திரன், இலங்கையில் நடக்கும் சம்பவங்களை பாரதம் புறக்கணிக்க முடியாது என்றும் பிரச்னை தமது இடத்துக்கு பரவுவதை தடுக்க உறுதி செய்வதுடன் அண்டை நாட்டின் பிரச்னையை தீர்த்து வைப்பதுஇந்தியாவின் கடமை என்றும் கூறினர்.

பஞ்சாப், அஸாம் பிரச்னைகளைத் தீர்ப்பதிலும், இலங்கை இனப்பிரச்னையைச் சமாளிப்பதிலும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நவீன அணுகுமுறையைக்கையாண்டு வருவதாகவும் திரு. ராமச்சந்திரன் கூறினர். [ரா]

## பரந்தன் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பரந்தனில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பலியான தர்மலிங்கம் தசேந்திரன் மரண விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா, பிரேத பரிசோதனை செய்து வைத்திய அறிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பும்படி சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்தார். (க-மா)

## ஜனாதிபதி..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இ. தொ காவின் நெடுங்கேணி ஒலுமடுக் கிராமத்தின் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் (28 வயது) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி உடனடியாக தொலைபேசிமூலம் இலங்கைத்தொழிலாளர் கரங்கிரஸின்பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. திரு. செல்லச்சாமி கைதுசெய்யப்பட்ட கிராமத் தலைவரை விடுதலை செய்யும்படியும் தஸ்தாவேஜுகளை மீண்டும் ஒப்படைக்கும்படியும் ஜனுதிபதியுடன் தொடர்பு கொண்டு விஷயத்தை எடுத்துச் சொன்னர். இதனைத் தொடர்ந்து ஜனுதிபதியின் பணிப்பின்பேரில் கைதுசெய்யப்பட்ட திரு. சிவசுப்பிரமணியம் விடுவிக்கப்பட்டதுடன் தஸ்தாவேஜுகளும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## சாந்தியும்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

உகந்தவர்களாக எதிர்காலத்தில் விளங்கவேண்டுமெனில் சிறுபராயம் தொட்டே அவர்கள் மனதில் அன்பு என்னும் தூய்மை ஒளியைப் பெற்றோர்கள் ஏற்றிவைக்கவேண்டும்'' என்ருர்.

மாணவர்களின் விசேட கலை நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் இடம் பற்றன. ஒளிவிழாவை முன்னிட்டு வித்தியாலய கிறிஸ்தவ ஆராதனை மண்டபத்தில் விசேட திருப்பலிப் பூசையும் இடம்பெற்றது. இதில் மாணவர்களுடன் பெற்ருேர்களும் கலந்துகொண்டனர். [மா]

## பரிசளிப்புவிழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிமனை தேசியஉரவாரத்தை முன்னிட்டு யாழ்' மாவட்ட பாடசாலைகளிடையே நடத்திய கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்காக இன்று (27ம் திகதி) அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த பரிசளிப்புவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கட்டுரைப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கீதா கனகசபாபதி முதற்பரிசையும், செல்வி சு. ராஜேஸ்வரி இரண்டாம் பரிசையும், தேவரையாளி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி பொ. சிறீ பவானி மூன்ரும் பரிசையும் பெறுகின்றனர். (ச)

○○

திருவெம்பாவை உற்சவத்தையொட்டி, வண்ணை ஐயனர் கோவிலடி சனசமூக நிலையத்தினரால் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்காக இன்று நடைபெறவிருந்த பரிசளிப்புவிழா எதிர்வரும் தைப் பொங்கல் தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதபசத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவிசுவேசப்பிள்ளையார் கோவிலில் இப்போட்டி நடைபெற்றது. (மா

○○

### செய்முறைக் கண்காட்சி

(புலோலி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் நடத்தும் செய்முறைக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நடைபெறுமென வடமராட்சி கால்நடைவளர்ப்போர் சங்கத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்: (ச)

## யாழ். தேவி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாக யாழ். ரயில்நிலையத்தை வந்தடைந்தது.

வழியில் பல இடங்களில் தந்திக்கம்பி அறுக்கப்பட்டு விட்டதால் வழக்கத்திலும் பார்க்க வேகம் குறைவாக வந்ததினுலும் ஆனையிறவில் சுமார் அரைமணி நேரம் சோதனை நடந்ததாலும், இத்தாமதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. [க]

## அகதி முகாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை ஜனுதிபதி மேற்கொண்டுள்ளார்.

அகதிமுகாம்கள் விஷயமாக ஜனுதிபதியை திரு. செல்லச்சாமி மீண்டும் அடுத்தமாதம் இரண்டாம் திகதி சந்திப்பார்.

அமைச்சர் எஸ். தொண்டமான் அடுத்தமாதம் பத்தாம் திகதி நாடுதிரும்பியதும்பதின் மூன்ரும் திகதி ஜனுதிபதியை இ. தொ. காங்கிரஸ் குழு சந்திக்கும்.

இச்சந்திப்பில், இந்திய வம்சாவழி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவது, தமிழர் பிரச்னை போன்ற விஷயங்கள் பற்றி விரிவாக ஆராயப்படும்.

### 115 பேரும் பழைய இடத்துக்கு

இதற்கிடையே வாகரையிலிருந்து சிங்களக்கிராமமொன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட 115 தமிழ் அகதிகளையும் மீண்டும் வாகரையிலேயே விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது.

## இருவர் சுட்டுக்கொலை!

(அம்பாறை)

தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அம்பாறை இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இந்த இரு இளைஞர்களும்தப்பியோட முயற்சிக்கையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், அவர்கள் 'ஈரோஸ்' அமைப்பை சேர்ந்தவர்கள் என்றும் அரச தரப்பில் கூறப்பட்டது. (ரா)

## பஸ் மீது...

(1ம்பக்க தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கிவந்த இப்பஸ்ஸை துப்பாக்கி ஏந்திய நான்கு நபர்கள் நிறுத்தும்படி சைகைகாட்டினர். பஸ்சாரதி சாதுரியமாக அப்பஸ்ஸை வேகமாக ஓட்டினர். அப்பொழுது அக்குண்டர் கோஷ்டி பஸ்ஸை நோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

கோப்பாயைச் சேர்ந்த வி. கந்தசாமி (46-வயது) என்பவருக்கு தலையில் சிறிது காயம் ஏற்பட்டது. இவர் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ற பின்னர் வீடு திரும்பினர். (க-மா)


### எமது புதிய வெளியீடுகள்

1. சிவப்புக் கிளி அர்ஜுன், நளினி, ஜீவிதா
2. SHE (ஒறிஜினல்) (புதிய ஆங்கிலப் படம்)

**வீடியோ புளொசம்ஸ்**
30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
[2647]

### நியூ விக்ரேஸ் புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. சிகப்புக் கிளி (தரமான பிரதி)
அர்ஜுன் - சந்திரசேகர்
2. இது எங்க ராஜ்யம் (பிரமிட் ஒரிஜினல்)
ராஜேஸ் - ஜீவிதா

**நியூ விக்ரேஸ்**
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி : 23532.

### VICKNA TUITION CENTRE

52, STANLEY ROAD, JAFFNA.
[கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த நிறுவனம்.]

**A/L மீட்டல் வகுப்புக்கள்**

DAY CLASSES - 30.12 85 காலை 8.00 மணி
சனி, ஞாயிறு - 28-12-85 காலை 8.00 மணி

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு. கிருஷ்ணனந்தன் |
| வர்த்தகம் | - | திரு. இலங்கா |
| கணக்கியல் | - | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | - | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | - | திரு. குழந்தைவேல் |
| புவியியல் | - | திரு. குணராஜா |
| இந்துநாகரிகம் | - | திரு. ஐயர் |
| அரசியல் | - | திரு. மஃறூப் |

குறிப்பு: இவ்வாசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை இந்நிறுவனத்தில் மட்டுமே.

வவனியாவில்

# நெதர்லாந்து அமைச்சர்கள் அகதிகளைச் சந்தித்தனர்

(வவனியா)

வவனியாவிலுள்ள அகதிகள் நிலைகுறித்து நேரடியாக ஆராய நெதர்லாந்து அமைச்சர் குழு வவனியாவுக்கு விஜயம்செய்தது.

விசேஷ விமானமூலம் வவனியா விமானப்படைத்தளத்தில் வந்திறங்கிய இக்குழுவினரைச் சர்வோதயப் பிரதிநிதிகளும், வவனியா மாவட்ட அரச அதிகாரிகளும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இக்குழுவில் நெதர்லாந்துக் கூட்டுறவு அபிவிருத்தி, பொருளாதார அமைச்சர் திருமதி ஈ. எம். ஸ்கூ, டாக்டர் ஏ பைஸ், சர்வதேசக் கூட்டுறவு அபிவிருத்தி பிரதிப்பணிப்பாளர் திரு வான் ஜெனிப், இலங்கை நெதர்லாந்து தூதரக அதிகாரி திரு. விச்ரைன்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

கண்டி வீதி போதிவிகாரையிலுள்ள சிங்கள அகதிகள் முகாமிற்கும், மன்னார் வீதியிலுள்ள வேப்பங்குளம் தமிழ் அகதிகள் முகாமிற்கும் இக்குழுவினர் நேரில் சென்று அகதிகளுடன் உரையாடினர்.

இக்குழுவுடன் வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. கே. கதிரமலை, உதவி அரச அதிபர்கள் திரு. கே. ஐயம்பிள்ளை, செல்வி எல். இமல்டா, திரு. யூ. பி. பியசேன, மேலதிக அரச அதிபர் திரு. கே. கருணபாலா ஆகியோரும் சென்றிருந்தனர்.

வேம்பங்குளம் அகதிகள் முகாமில் வைத்து வவனியா புனர்வாழ்வு அமைப்புச் செயலாளர் திரு. வி. குகேந்திரன் குழுவினரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

முகாம்களில் உள்ள மக்களில் அநேகர் விவசாயிகளே! இல்லங்களைவிட்டுவெளியேறிய மக்களுடைய வீடுகளுக்கும் அவர்களுடைய சொத்துக்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவர்களுடைய பொருளாதாரநிலை சீரழிக்கப்பட்டுள்ளது. இவர்களின்புதுவாழ்வுக்கு உதவும்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உச்சியோடையில் தபால்பெட்டி

(உடுவில்)

மானிப்பாய் உச்சியோடைக் கிராம மக்கள் தமது தபால்களைச் சேர்ப்பதில் இதுவரை இருந்துவந்த சிரமம் நிவர்த்தியாகியுள்ளது. முன்னாள் மானிப்பாய் எம். பி, அமரர் வி. தர்மலிங்கத்தின் நினைவாக இப்பகுதியில் தபால் பெட்டியொன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

மானிப்பாய் தபாலதிபர் மற்றும் விழிப்பு மன்றத்தினர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 12 1985-12-27)
கிழமை- வெள்ளி
திதி- பூரணை பி.ப வரை
நக்ஷத்திரம்- திருவாதிரை பின்இரவு வரை

மேடம்; உறவு முறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர். வாழ்த்துமுண்டு.

இடபம்: கழுகுப் பார்வை வட்டமிடும். காத்திருப்பார் பகைவர். நிதிநெருக்கடியைத் தவிர்க்க மதிவழிநில்.

மிதுனம்: ஆசைகள் அலைமோதும். இன்று நிம்மதியற்ற நிலைதென்படும் கல்வித் துறையில் சோர்வுக்கும் இடமுண்டு.

கடகம்: இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோடுவீர் உயர்மட்டத்து அன்பும் கிடைக்கும். பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

சிங்கம்: கற்றதனால் பயன் இன்று கட்டாயம் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர். ஆதரவும் பெருகும்.

கன்னி: இதயத்தில்பூரிப்பு. இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும். கரும்பு போல் இனிக்கும் காரியங்களும் உண்டு.

துலாம்: வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உருவாகும். நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேற்றப்படும். புத்திரசுகமும் உண்டு.

விருச்சிகம்: அகால போசனத்தால் வயிற்றுக்கோளாறு ஏற்படும். முன்னேற்றம் தடைப்படும். இன்று குறை கேட்கவும் நேரிடும்.

தனுசு: உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும். குடும்பத்தவர்களின் வாழ்வில் இனிமை தவழும். சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும்

மகரம்: நாள் எல்லாம் உடல் நலிவுதோன்றும். பிணிக்கிடம் கொடாது சுகாதாரத்தைப் பேணவும்.

கும்பம்: நீண்டநாள் எதிரிகள் மீண்டும்நண்பர்கள் ஆவார்கள். பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு. சுப தினம்,

மீனம்: ஒளிபரப்பும் வாழ்க்கை. உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும் தொழிற்துறையில் புதிய உத்வேகம் காணப்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கைத்தொழில் அபிவிருத்தி அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

அரியாலை மகளிர் கிராமஅபிவிருத்திச் சங்க கைத்தொழில் அபிவிருத்தி அங்குரார்ப்பண வைபவம் அரியாலை, மாம்பழம்சந்தி சங்க மண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி காலை நடைபெறும்.

திருமதி பா. வேல்முருகு தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. இ.சிவ குருநாதன் காசோலை வழங்குவார்.

திரு. எஸ். கோபாலரத்தினம், திருமதி எஸ்.பாலசுப்பிரமணியம், திரு. த. சோமசுந்தரஐயர், டாக்டர் எஸ். மோகனதாஸ், திரு. எஸ். கருணைநாதன், 'மில்க்வைற்' அதிபர் திரு. கனகராசா ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

[க]

## "மக்களின் சுகவாழ்வே எமது பெரும்செல்வம்"

(பண்டத்தரிப்பு)

''ஒரு கிராமத்தின் நல்வாழ்வுக்கு சுகாதார சேவைகளும் வைத்தியசேவைகளும் மிகவும் முக்கியமானவை ஆகும். கடந்த ஆண்டில் எமது சுகாதார நிலையத்தின்மூலம் இக்கிராம மக்களுக்கு குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றக்கூடியதாக இருந்தது, எமது நிலையத்தின் சேவைகளை மேலும் விஸ்தரித்து மக்களின் சுகவாழ்விற்கு எம்மாலான பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்''

இவ்வாறு சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவுக்பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில குழுவின் தலைவர் சட்டத்தரணி பொன். சிவபாலன் குறிப்பிட்டார்.

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கானை சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். ஜோன் உரையாற்றுகையில்; கிராமத்தின் சுகாதார பிரச்னைகளை சுகாதாரத் திணைக்கள ஊழியர்களினால் தனித்து நின்று நிவர்த்திசெய்ய முடியாது என்றும் பொது மக்களும் தங்களுடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும், வட்டுக்கோட்டை தொகுப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவமான திரு. சு. நடேசு உரையாற்றுகையில்; தமிழ்ப் பிரதேசங்களின் சுகாதார அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதில் அரசாங்கம் மாற்றுந்தாய் மனப்பான்மையைக் கடைப்பிடித்து வருவதாகவும், பொதுமக்கள்தமது சுய முயற்சியினால் தங்கள் பகுதி சுகாதார வைத்திய சேவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி செ. வைத்திலிங்கம், புலவர் கா. வேல்முருகன், ஆசிரியர் எஸ். சண்முகலிங்கம். குடும்பநல சேவையாளர் திருமதி. சிவா. சற்குணசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். குழுவின் செயலாளர் திரு.சி. தயாபரசிவம் நன்றியுரை நிகழ்த்தினார்.

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-30 மலரும் அரும்புகள் சிறுவர் நிகழ்ச்சி
6-00 விவரணச் சித்திரம்
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 சிவதாண்டவம் (தமிழ்)
7-25 'சுவர்ண ரங்கா' இசை நிகழ்ச்சி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-30 இசை நிகழ்ச்சி
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 'த இயர் தட் வோஸ்' நடைமுறை விவரணம்
9-50 ஆங்கிலப் படம்
**11-45 ஒளிபரப்பு முடிவு**

## இப்படியும் நடக்கிறது

அஸாம் மாநிலத்தில் சட்ட சபைத் தேர்தல் நடந்த விஷயம் நீங்கள் தெரிந்ததே. ஆனால்; சில 'உள் விஷயங்கள்' நீங்கள் அறிந்திருக்கமுடியாது.

அஸாம் மாநில முதலமைச்சரின் பெயர் பிரபுல்ல-மகிந்தா. இவர் இப்பொழுதும் ஒரு சட்ட மாணவன். வயது 32. இவரது அஸாம் கணபரிஷத் கட்சி 64 தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளது. 64 சட்ட சபை உறுப்பினர்களில் (M. L. A 52 பேர் பிரமச்சாரிகள். 28 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

அந்நியர் வருகையை எதிர்த்து பங்களாதேச முஸ்லிம்கள், ஆறு ஆண்டுகளாக அஸாம் மாணவர்கள் கிளர்ச்சி செய்து வந்தார்கள். முடிவில் இந்திய மத்திய அரசு, மாணவர் கோரிக்கைக்கு மதிப்பளித்தது!

ஆர்ப்பாட்டம் செய்த மாணவ அணிகளின் கட்சியாக அஸாம் கணபரிஷத் உருப்பெற்றது.

அஸாம் மாநிலத்துடன் சேர்த்து இந்திய துணைக்கண்டத்தில் மொத்தம் ஏழு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளன. அதேநேரத்தில் வங்காளம், குஜராத் தவிர்ந்த ஏனைய மாநிலங்களைக் கைப்பற்றியுள்ள கட்சிகள் தேசியக் கட்சிகள் என்று கூறமுடியாது. (தகவல்: ச. அறிவழகன்)

உலகம் உண்மையிலேயே பெரியதுதான். எங்கெங்கு, என்ன எல்லாம் நடக்கிறது பாருங்கள்!

'ஊடுருவி'

## மூலிகை

குடும்ப மருத்துவ ஏடாக மூலிகை என்னும் சஞ்சிகை ஒன்று வெளிவந்திருக்கின்றது.

பிரயோசனமான பல விடயங்களை உள்ளடக்கிய 'மூலிகை' நம் சமூகத்துக்கு பெரிதும் பயனபடும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

வேம்பு - நெல்லிபோன்ற மூலிகைகள் பற்றிய குறிப்புக்கள் வாசித்துப் பயன்படுத்துபவர்கட்கு நன்கு பயனளிக்கும்.

கட்டுரைகளின் தலையங்கங்களாக உள்ள தொடர்கள் பல சிந்தனையைத் தூண்டுகின்றன.

''நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முதல் உதவிகள் சில.'' என்னும் சட்டுரையில் துப்பாக்கி ரவை (குண்டு) கைகால்களில் பாய்ந்துவிட்டால் செய்யவேண்டிய முதலுதவிகள் பற்றிய விளக்கம் ஒவ்வொருவரும் அவசியம்தெரிந்து கொள்ளவேண்டியதாகும்.

மருத்துவக் கலையில் இலக்கியத்தமிழ் எனும் கட்டுரையில் ஒரு பாடல் விளக்கம்: 'பூனைவணங்கி (குப்பைமேனி) தும்பை,கையாந்தகரை இவற்றைச் சூரணித்து (பொடியாக்கி) உண்பவர்க்கு வாக்கு. செல்வாக்கு,மேன்மை என்பன உண்டாகும். உடம்பிலுள்ள சோர்வு, வாதம் என்பன நீங்கும் என்றிருக்கிறது. இதே போல வேறு இருபாடற் கருத்துக்களும் உள்ளன.

நூலாசிரியர் வரைந்துள்ள ஆரோக்கியமற்ற சமூகத்தால் ஒரு புதிய சமுதாயம் படைத்திடமுடியாது என்ற கட்டுரை சித்தவைத்தியத்திறப்பு மூலிகைகள் பயன்பெறும் வழி இவைகளில் நம் சமூகத்துக்கு உள்ள பொறுப்புப்பற்றித் தெளிவாக விளக்குகின்றது.

டாக்டர்விரி இளங்கோவனை ஆசிரியராகக்கொண்டு வெளியாகும் இச்சஞ்சிகையின் விலை 5 ரூபாவாகும்.

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்திலுள்ள 'மூலிகை மருத்துவ ஆராய்ச்சிச்சபை'யே இந்நூலை வெளியிடுகின்றது இச்சபையின் பணிக்கு ஊக்கமளிப்பதும், இச்சபையின் பணியை ஏற்றுப் பயன்படுத்துவதும் நம்சமூகத்திலுள்ள ஒவ்வொருவரின் கடன் என்று துணிவாகச் சொல்லலாம்.

-தி. பொன்னம்பலவாணர்

## சத்தியபுரம் சிற்றாலயத்தில் கலை விழா

(உடுவில்)

''கள்ளம் கபடு சூது வாது அற்றவர்கள் சிறார்கள். அவர்களின் முகங்களில் யேசு பிரானின் ஒளியை நாம் காண்கிறோம். எதிர்காலத்தில் இப் பிள்ளைகள்தான் நாட்டினை ஆளப் போகிறார்கள். அவர்களை நற்பிரஜைகளாக வளர்ப்பதன் மூலம் தான் நாம் யேசு பிரானின் எண்ணங்களையும் விருப்பங்களையும் இவ்வுலகில் நிலைபெறச் செய்ய முடியும்.''

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்றாலய பிள்ளைகள் பராமரிப்பு நிலையக் கலை விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வட்டாரக் குரு வண. டி. சி இரத்தினசிங்கம் இவ்வாறு கூறினார்.

கலை விழாவைத்தொடர்ந்து வட்டாரக்குரு நத்தார் பரிசுகளை வழங்கினார்.

## பயிற்சி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆசிரியர் பதவிக்கு நேர்முகப்பரீட்சை வாயிலாகவும் தெரிவு செய்யப்பட்டு கிராகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு சேவை முன் பயிற்சிக்கென சென்ற 137 ஆசிரியர்கள் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் கலாசாலையிலிருந்து வெளியேறினர்.

இவர்களுக்கான நியமனங்கள் யாவும் வெளிமாவட்டங்களிலேயே நடைபெறுமென தெரிய வருகிறது. (ச)

## அகதிகளுக்கு உடுபுடவை

(உடுவில்)

வவனியா, செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாக உடுவில் பகுதிக்கு வந்துள்ள சுமார் 20 குடும்பத்தவர்களுக்கு தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த யாழ்ப்பாண அத்தியட்சாதீன பேராயர் வண. டி. ஜெ, அம்பலவாணர் உடுபுடைவைகளை நிவாரணமாக வழங்கினார்.

# இலங்கை இனப்பிரச்னையால் உருவாகியுள்ள விளைவுகள்

## சீனப் பத்திரிகை விமர்சனம்

(கொழும்பு)

''இலங்கையில் தொடரும் இனப்பிரச்னையானது நாட்டின் அரசியல், பொருளாதார துறைகளில் பெரும் தாக்கங்களை விளைவித்துள்ளது.''

இவ்வாறு சீன செய்தி ஸ்தாபனமான சின்ஹுவா கூறியுள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் அண்மைய வெளியீட்டில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''இலங்கையில் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும், சிறுபான்மைத் தமிழர்களுக்குமிடையில் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடரும் இனப்பிரச்னை இவ்வாண்டு நாட்டின் பல்வேறு துறைகளிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரச்னை, இலங்கை அரசாங்கத்தை பாதுகாப்புக்காக வரும் நிதியாண்டில் சுமார் 550 கோடியை [நாட்டின் மொத்த வருமானத்தில் 15%] செலவுசெய்ய நிர்ப்பந்தித்துள்ளது. இது குறித்து நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல் கருத்துத்தெரிவிக்கையில், ''பாதுகாப்புச்செலவினங்களுக்கு மட்டும் இப்பெருந்தொகையை ஒதுக்குவது எமது பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளது. அதனுல்தான் இப்பிரச்னைக்கு விரைவில் ஒரு தீர்வுகாணவேண்டும்'' என்று கூறினுர்.

இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் இவ்வாறு பெருமளவு அதிகரித்துச்சென்ருலும் நாட்டின் தேசிய வருமானம் வருடா வருடம் வீழ்ச்சியடைந்துவருகிறது.

இவ்வினப்பிரச்னையினுல் மிகவும் பாதிக்கப்பட்ட தொழிற்றுறை உல்லாச பயணத்துறையாகும். இதனுல் இலங்கை ஈட்டிய வருமானம் சுமார் 3 மில்லியன் டாலர்களினுல் [சுமார் 10 கோடி ரூபா] வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு கடல்பிரதேசங்களில் தடைசெய்யப்பட்ட, பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனுல், பல்லாயிரக்கணக்கானேர் தங்கள் ஜீவனுேபாயத் தொழிலைக் கைவிடச்செய்துள்ளதுடன் அவர்களை அகதிமுகாம்களில் தஞ்சமடையவும் செய்துள்ளது.

இதனுல் இலங்கை அரசாங்கத்துக்கு இத் தொழில்மூலம் கிடைத்துவரும் வருமானம் கடந்த வருடத்தைவிட முப்பது வீதத்தினுல் குறைந்துள்ளதுடன் உள்ளூர் தேவைகளைப் பூர்த்திசெய்ய வெளிநாடுகளிலிருந்து மீனை இறக்குமதிசெய்யவும் வேண்டியதாகவுள்ளது.

விவசாயமும், பெருந்தோட்டத் தொழிற்துறையும் இவ்வினப் பிரச்னையினுல் பாதிக்கப்பட்டுள்ளன.

சாதாரமான காலநிலை இலங்கைத் தீவை இவ்வருடம் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்யுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் அரசாங்க துருப்புகளுக்கும் இடையிலான மோதல்களின் விளைவாக போக்குவரத்து வசதிகள் பாதிப்புற்று இருப்பதனுல் இது சாத்தியமாக வில்லை. இதனுல் இலங்கை அரசு சீனுவிடமிருந்தும், பாகிஸ்தானிடமிருந்தும் இரண்டு லட்சம் தொன்னுக்கும் அதிகமான அரிசியை இறக்குமதிசெய்யவேண்டியுள்ளது.

பெருந்தோட்டத் தொழில்களான தேயிலையினதும், றபரினதும் உற்பத்தி இவ்வருட முதல் ஆறுமாத காலப்பகுதியில் கடந்தவருட இதேபகுதியில் உற்பத்திசெய்யப்பட்டதைவிடமுறையே 3.7%, 14% த்தினுல் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு இலங்கையின் தேசிய வருமானம் குறைந்துவருகின்ற இவ்வேளையில், நடப்பு வருட வரவுக்கும் செலவுக்கும இடையிலான சுமார் 3,000 கோடி ரூபாவை நிரப்ப வழி அறியாமல் அரசாங்கம் திண்டாடுகிறன.

உதவிசெய்யும் நாடுகள் இலங்கைக்கு உதவ தயக்கம் காட்டுகின்றன. தமது உதவிப் பணத்தில் பெருந்தொகையை உள்ளூர் பாதுகாப்புக்காக செலவு செய்வதை அவை விரும்பவில்லை. அத்துடன் தொடரும் இனப்பிரச்னையும் வெளிநாடுகளில் இலங்கையின் நற்பெயரைக் கெடுத்துள்ளது.

இறுதியாக அரச தரப்பு வட்டாரங்களின் கூற்றுப்படி 86ம் வருடத்திலேனும் இப்பிரச்னை தீர்க்கப்படாவிடின் நாடு மிகவும் கஷ்டமான நிலையை எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

---

### கிறிஸ்மஸ் - புதுவருட

# உதைபந்தாட்ட போட்டி

[நாவாந்துறை]

நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக்கழகத்தின் கிறிஸ்மஸ்-புதுவருட உதைபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் சென். மேரீஸ் மைதானத்தில் நடைபெறும்.

முதலில் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகமும் பொற்பதி விளையாட்டுக் கழகமும் மோதும். இதனைத்தொடர்ந்து சென். மேரீஸ் வி. கழகமும், சென். அன்ரனிஸ் வி. கழகமும் மோதும். இறுதிப்போட்டியாக சென். நீக்கிலஸ் வி. சழகமும், யாழ் முஸ்லிம் லீக் வி. கழகமும் விளையாடும்.

பிரதம விருந்தனர்களாக, வண. பிதா பி. எம். இம்மனுவல் அடிகள், வண. பிதா ஏ. ஸ்ரீபன் மரியதாஸ் அடிகள், அருள். சகோதரர் செபஸ்ரி நீக்கிலஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

---

# ''இளைஞர் முன்னேற்றத்துக்கு தலைமைத்துவப்பண்பு அவசியம்''

(பண்டத்தரிப்பு)

''தலைமைத்துவப் பண்பும், கூட்டுறவு மனப்பான்மையும் இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமானதாகும். மகத்தான இளைஞர் சக்தியை நல்வழிப்படுத்திஆக்கப்பணிகளில் ஈடுபடுத்தினுல் எமது சமுதாயம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.''

இவ்வாறு சில்லாலை புனித சூசையப்பர் வாலிபர் சங்கம் நடாத்திய சர்வதேச இளைஞர் ஆண்டு விழாவில் பிரதம அதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர் திரு. எஸ். கார்த்திக் குறிப்பிட்டார்.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயமுன்றலில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. அ. பென்சமின் ஜெயசீலன் தலைமைவகித்தார். திரு. கார்த்திக் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

''தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையினுல் எமது தலைமைப்பீடத்திலிருந்து நிதி உதவிகள் தமிழ்ப்பகுதிகளுக்குக் கிடைப்பது மிகவும் குறைவாக இருந்தபோதிலும் எமது சுயமுயற்சியினுல் அபிவிருத்திட்டங்களை நிறைவேற்ற முயற்சித்துவருகின்ருேம். இதற்கு இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' என்ருர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. ஆர். ஜெயக்குமார் அடிகளார் உரையாற்றுகையில்; எமது சமுதாயத்தில் புரையோடியிருக்கும் சீதனக் கொடுமைகள், சாதிப்பாகுபாடுகள் ஆகியவற்றை ஒழிப்பதற்கு இளைஞர்கள் தக்க நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டியது அவசியம் என்றும், இனத்தின் எதிர்காலத்தை நிச்சயிக்கும் பணியை பொறுப்பேற்றுள்ள எமது இளைஞர் சமுதாயம் ஒற்றுமை கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளைப் பேணவேண்டியது மிகவும் அவசியமானது என்றும் குறிப்பிட்டார்.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. பி. இருதயதாஸ் அடிகள் பேசுகையில்; ஒரு சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபடும் இளைஞர்கள் தியாக சிந்தனையுடையவர்களாகவும், நேர்மைமிக்கவர்களாகவும் விளங்கவேண்டும் என்றும், பணத்திற்காகவோ புகழுக்காகவோ எந்த பொதுநலத் தொண்டுகளிலும் ஈடுபடுவதை இளைஞர் சமுதாயம் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவைமுன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை யாழ். மாவட்ட இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர் திரு. கார்த்திக் வழங்கினுர். சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. இமானுவேல் விழாமலரை வெளியிட்டு உரையாற்றினுர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

### ஒளி கிடைத்ததும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாட்டப்பட்ட மின்கம்பம் ஒன்றையும் பிடுங்கி எறிந்துவிட்டதாகவும் கூறப்பட்டது. இதனைச் சமாதான முறையில் தீர்ந்து வைக்கச்சம்பந்தப்பட்டவர்களுடன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர், பண்டத்தரிப்புக் கிராம சேவை அலுவலர் மற்றும் இப்பகுதிப் பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லையாம்.

---

# ''சாந்தியும் சமாதானமும் நிலவ இளைஞர் பங்களிப்பு தேவை''

[நெடுந்தீவு]

''அன்பு, சமாதானம் ஆகியவை உலகில் நிலைக்க வேண்டும்என்பதற்காக கிறிஸ்துநாதர் பாடுபட்டார். இன்று நாம் பல்வேறு இன்னலைச் சந்தித்தும் எதிர்நோக்கியும் வாழ்ந்துகொண்டிருக்கிருேம். தன்னுடைய 33-ம் வயதில் ஒரு இளைஞராக இருந்தவேளையில் யேசுகிறிஸ்து மரித்தார். இன்று எமது இளைஞர்கள் பலர் அன்ருடம் இறக்கின்ற துர்ப்பாக்கிய நிலையில் வாழ்கிருர்கள். இளைஞர்கள் சாந்தியும் சமாதானமும் ஏற்பட தமது பங்களிப்பைச் செய்யவேண்டும்.''

இவ்வாறு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு ஜோர்ச் லம்பேட் அடிகளார் கூறினுர்.

வித்தியாலய கிறிஸ்தவ மன்றக் காப்பாளர் புலவர் திரு. ஏ. டபிள்யூ அரியநாயகம் தனது உரையில்; ''அநாகரிக இருள் மூடிக்கிடக்கும் உலகில் சமாதானமும் சகோதரத்துவமும் நிலவ கிறிஸ்துவின் போதனைகள் வழிகாட்டுகின்றன. துயரப்படும் ஒவ்வொரு மனமும் அவரது போதனைகள் மூலம் ஆறுதல் பெறமுடியும். நாம் நமக்காக மட்டுமன்றி ஒவ்வொருவருக்காகவும் வாழப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். எல்லா மதங்களும் இதைத்தான் நமக்குப் போதிக்கின்றன. மாணவர்கள் நாட்டிற்கு

(8-ம் பக்கம் பார்க்க)

---

### வெள்ளிச்சிந்தனை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும் இன்புறத்தக்கதெளிவும் செறிவும் உடையன.

உலகியல் வாழ்வில் திளைத்திருந்தவர்கள் சிவபக்தியின் இனிமையையும் சிறப்பையும் அறிந்து சிவபக்தராக முயலும் போது நீண்டகாலம் சிவனடியார்களாக இருப்பவர்களது தொடர்பும் ஆதரவும் அவசியம் என்பதைப் புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ என்னும் வாசகம் பலகோணங்களில் பிரகாசிக்கின்றது.

இப்பூமியில் உள்ள ஒழுக்கத்தில் மிக்க விவேகிகளால் மட்டுமன்றி வானுலகவாசிகள் என்று புகழப்படும் பல்வகைச் சிறப்புடையவர்களாலும் அறிதற்கரியநுண்மை பெருமை அருமை என்பன உடையவன் பரமபதியாகிய சிவபிரான் என்கின்ருர் இவ்வுலகினையே சிவலோகமாகக்கண்டு திருவாசகம் பாடிய வாதவூரர்.

திருவாசகத்தினை ஓதிச்சிந்தித்து வாழுவதால் இவ்வுலக வாழ்வில் ஏற்படத்தக்க தொல்லைகளையும் நீக்கலாம், நித்தியானந்த வாழ்வினையும் அடையலாம் என்ற கருத்தின்படியே நம் முன்னேரான ஆண்களும் பெண்களும் தம் நாயன் சிவனே எனப்பணிந்து திருவெம்பாவைக்கால வழிபாடாற்றித்தம்முள் உறங்கிக் கிடந்த தெய்வீகத்தை விழிப்படையச்செய்து வாழ்ந்திருக்கிருர்கள்.

தொல்லைகள் தளைகளால் துன்புறும் நாம் திருவெம்பாவைக் காலத்தின் பின்னரும் திருவாசகம் போன்ற திருமுறைப்பாராயணம் சிந்தனைகளை நீடித்தால் துன்பங்களை விரைவில் எளிதில் நீக்கலாம்.

தொல்லை இரும் பிறவிச்
சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம்
ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும்
வாதவூரெங் கோன்
திருவாசகம் என்னும்தேன்.

-பழம் பாடல்

-அருளாளன்-

---

### திருவாதவூரடிகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் உரை ஆகிய இருவர் உரைகளையும் பின்பற்றி சிவஞான சுவாமிகளின் பரந்த உரையைத் தொடர்ந்து விரிந்தது. திருவாதவூரடிகள் புராண விரித்தியுரை' என்று ஆன்ருேர் போற்றினுலும் அந்த உரைகளுக்கும் திருவாதவூரர் புராணத்து விருத்தியுரைக்கும் பாரிய வேறுபாடொன்று உண்டு.

இந்த உரை இலக்கண வழுவின்றியும் ஆனுல் கடும் இலக்கணமாகாமலும், கடும்சொற்ருெடர்களின்றி தெளிவும் சுவையும் மிக்கதாயும், முதன் நூலைப்போல மாணுக்கரும் பயிலத்தக்கதாகவும் உள்ளது. இதுவே இந்த உரை நெடுங்காலம் உலகில் பயின்றுவர ஏதுவாகும்.

திருவாதவூரடிகள் பராணம் போன்று இந்த உரையும் அழியாப்புகழ் பெற்றதெனலாம்.

---

### பாவைபாடிய....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பதாவது இலக்கம் தன் தன்மை மாருதபெருமைபெற்றது என்றும் சாஸ்திர வல்லுனரும். எண்கணித ஜோதிடரும் கூறுவர், ஆனுல் நம்மவர்கள் மார்கழி மாதத்தைச் சூனிய மாதமென்றும், பீடைபிடித்த மாதமென்றும் பல காரணங்கள்கூறி ஒதுக்கித்தள்ளிவிடுவார்கள். நல்ல காரியங்கள்செய்யாமல். இந்த மாதத்தில்தான்இரண்டு புனிதமான பண்டிகை நாட்கள் வருகின்றன. அவை வைகுண்டவாசன் ஸ்ரீமான் நாராயணனைப் போற்றிப் பணித்து உய்ய வைகுண்ட ஏகாதசியும் திருக்கைலாசபதி ஸ்ரீபரமேஸ்வரனை வழிபட்டு மகி திருவாதிரையுமாகும். அதனுற்ருன் கீதையில்கிருஷ்ணபரமாத்மாபார்த்தனுக்குக் கூறுகிருர் ''மாதங்களில் நான் மார்கழி'' என்று மார்சழி மாதம் இறைவனுக்குரிய மாதம் என்பதுதெளிவு.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலையில் இருந்த போது பனி படர்ந்த கடுங்குளிர் காலம், அப்போது திருவாதிரைக்கு இன்றும் பத்து நாட்கள் இருந்தன. விடியற்கருக்கலில் இள மங்கையர்கள் பலர் எழுந்து வீட்டைப் பெருக்கி தண்ணீர் தெளித்து, மாக்கோலமிட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து குளத்திற்கு நீராடச் செல்லுகிருர்கள். அந்த இனிய காட்சியைக் காண்கிருர்சுவாமிகள். தன்னையே ஒரு கன்னிப் பெண்ணின் நிலையில் வைத்து உணர்வலைகள் மேபட, அழகு தமிழில் எழிய நடையில் உள்ளம் உருக இறை தத்துவக் கதைகளாகத் திருவெம்பாவையை ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை யாம் பாடக்கேட்டேயும்'' எனப் பாடலானுர் முதல் எட்டுப் பாடல்களிலும் ஒருபெண் இன்னெரு பெண்ணைத் துயில் எழுப்புவதாகவும் அதன்பின்பு நீராடச் செல்லுகையில் ''முன்னைப்பழம பொருட்டும் முன்னைப்பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே'' எனத் தொடங்கும் ஒன்பதாவது பாடலில் இருந்து மிகுதிப்பாடல்கள் பன்னிரண்டையும் பெண்கள் தம்மிற்ருமே கூறியதாகவும் பாடலானுர்.

''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என மணிவாசகரை விழித்துக்குருவடிவான சிவபெருமானே விரும்பிக்கேட்டாரென்ருல் திருவெம்பாவையின் மகிமை பேசவும்வேண்டுமோ. ஆகவே, நம் உள்ளத்தே மங்கிக்கிடக்கும் ஞானப் பெரு விளக்கை கொணர்ந்து 'அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை, ஆண்டவனின் அடிக்கமலம் பணிந்து வேண்டுவோமாகில் 'எந்நாளும் என்ன குறையுமிலோம்.''

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


## ஒரு பாடசாலை உருவான கதை இது!

[யாழ்ப்பாணம்]

''இப்பாடசாலை அதிபர் 1974-ல் கடமை ஏற்றபொழுது நீர் வசதி இன்றி, ஓலைக்கொட்டிலாக இப்பாடசாலை இருந்தது. காணியும் அரசுடமையாகவில்லை. அதிபரின் அயராத உழைப்பினால் சிரமதான மூலம் கிணறு வெட்டப்பட்டது. பெற்றோர், மற்றோர் ஆதரவு பெற்று நிலத்திற்குச் சிமெந்து பூசப்பட்டது. 55 அடிக் கட்டிடம் 100 அடிக்கட்டடமாக மாற்றப்பட்டு ஓடு போடப்பட்டது. காணி உரிமையாளர் வழக்குத்தொடர்ந்தார். அதிபர் கோடேறினார். 1980-இல் காணி அரசுடமையாக்கப்பட்டது. அதிபரின் அயராத முயற்சியால் இன்று சுற்றுமதில், குழாய் நீர் வசதி, 'சுமதிதாரணி' அரங்கு, மின்சார ஒளி, கட்டடங்களுக்குக் கதவு இப்படியாகப் பலவேலைகளைப் பலரின் உதவிபெற்றுச் சாதித்த பெருமை இந்த அதிபரையே சாரும். ஓலைக்கொட்டில் மாடிக் கட்டிடமாக மாறியது. இவரின் இடத்தைநிரப்ப இவரைப்போல் ஒருவரைக் காணமுடியாது-

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர் திரு. பொ நடராசா இளைப்பாறியதையொட்டி அவருக்கு அளித்த பிரிவுபசார வைபவத்தில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி ஶ்ரீரு. சிவநாயகமூர்த்தி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

''மாணவர்கள் ஒழுக்கசீலர்களாக, கல்வியில் முன்னேற்றமுள்ளவர்களாக வருவதே அவர்கள் எனக்கு அளிக்கும் அன்பளிப்பு, வெகுமதியாகும். நானும் கஷ்டப்பட்டே முன்னுக்கு வந்தேன். கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்திற் கல்வி கற்கும் பொழுது அதிபர் க. ஆறுமுகம், பண்டிதர் சி, சிவசம்பு, பண்டிவர் ச. சங்கரப்பிள்ளை போன்ற ஆசிரியர்கள் செய்த உதவிகளை மறக்கமுடியாது. மாணிக்கம், மயில்வாகனம் நிதியாக வருடாவருடம் ரூ 250 அன்பளிப்புச்செய்வேன் அதனைவசதியற்ற கல்வியில் ஆர்வமுள்ள மூவருக்குப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டும்'' என்று இளைப்பாறிய அதிபர் திரு. பொ. நடராசா கூறினார்.

''அன்பினால் எல்லோரையும் கவர்ந்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பலர் உதவி பெற்று இப்பாடசாலையை இந்நிலைக்குக் கொண்டு வந்த அதிபரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை'' என்று திரு. இ. நாகரத்தினம் குறிப்பிட்டார்,

''இவ்வதிபர் தன் வாழ்க்கை வரலாற்றை ஒளிக்காமல் கூறினார். ''ஊரார் பிள்ளைக்கு அறிவை ஊட்டினால்தன்பிள்ளை தானே வளரும்'' என்ற முதுமொழியை உறுதிப்படுத்துகின்றது. இவரது சேதை'' முன்னாள் அதிபர் அ. செல்லத்துரை கூறினார்,

பழைய மாணவர்களான சட்டத்தரணிகள், வைத்திய கலாநிதிகள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் பலரும் இப்பிரியாவிடை உபசாரத்தில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

## இருவருக்கு மின்கம்ப மரணதண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலநேற்று இருவருக்கு மின்கம்ப மரணதண்டனை அளிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்புரயில் நிலையத்துக்கு சமீபமாக இருவரின் சடலங்களும் காணப்பட்டன. சடலங்களுக்கு அருகிலிருந்த குறிப்பில் ''காட்டிக்கொடுத்த சமூகவிரோதிகள்'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இவர்கள் கிளிநொச்சியில் ஒப்பமிடலாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் கைதாகி கோட்டை இராணுவ முகாமில் சிறைவைக்கப் ட்டு நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்ட இளைஞர்கள், யாழ் கோட்டைக்குச் சென்று வாராவாரம் கையொப்பம் இடுவதில் உள்ள கஷ்டங்களை கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் கிளிநொச்சி இணைப்பதிகாரிக்கு சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்துபிரஸ்தாப இளைஞர்கள் கிளிநொச்சி இராணுவமுகாமிலேயே கையொப்பம் இடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரஜைகள் குழுவின் உதவிச் செயலாளர் டாக்டர் அ. தாமோதரம்பிள்ளை இணைப்பதிகாரி மேஜர் கொப்பகடுவவயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்

## மலேரியா

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் மலேரியாக்காய்ச்சல் தலைதூக்கியுள்ளது.

நோயினால் பாதிக்கப்பட்ட பலர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நுளம்புக்கடியே இந்நோய்க்குக் காரணமெனவும் நுளம்புக்கடிக்குட்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்கு சென்று உடன் சிகிச்சை பெறுமாறும் சுகாதாரப்பகுதியினர் கேட்டுள்ளனர், (ச)

## வை. எம். சீ. ஏ. நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

நவாலி வை. எம். சி. ஏ. நூலக அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு நேற்றுமுதல் இம்மாதம் 30-ம் திகதி வரை நூலகவாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதையொட்டி நடமாடும் நூல்விற்பனை நிலையமொன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. ஈழத்துத் தமிழ் நூல்கள் பல இந்நிலையத்தில் விற்பனையாகிவருகின்றன.

கிராம நூலக இயக்கத்தில் ஆர்வம்கொண்ட பலரின் ஆதரவையும் நவாலி வை. எம். சீ. ஏ நூலகவார நிகழ்ச்சிகள் பெற்றுவருகின்றது. இதையொட்டி 29, 30ம் திகதிகளில் பனைவள அபிவிருத்திசபையின் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறவுள்ளது. நூலக வாரத்திற்கான ஆலோசனைகளை ஆனைக்கோட்டை அயோத்தி நூலகசேவையினர் அளித்துவருகின்றனர்.

## பண்ணாகத்தில் திருவாசகம் முற்றோதல்

[சுழிபுரம்]

பண்ணாகம் விசவத்தனை சத்சங்க வட்டத்தினர் இம்மாத இறுதி ஞாயிறன்று திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் நடைபெறவுள்ளது. காலை முதல் மாலை வரை நிகழ்ச்சி நடைபெறும்.

## கிறிஸ்மஸ் தினம்: தெ. ஆபிரிக்காவில் 62 பேர் பலி

[லண்டன்]

தென்னாபிரிக்காவில் நத்தார் விடுமுறையின்போது 63 கறுப்பு இன மக்கள் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

டர்பன் நகருக்கருகில் ஆதிவாசிகளுக்கிடையே இடம் பெற்ற ஒருமோதலின் போது 53 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது. [ரா]

## வீதிதிருத்தம்

(பண்டத்தரிப்பு)

நீண்டகாலமாக குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்துவந்த பண்டத்தரிப்பு-கீரிமலை பிரதானவீதி பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் திருத்தப்படுகின்றது. பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா, பண்டத்தரிப்புப் பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். ரி.சதிரவேலுப்பிள்ளை ஆகியோர் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சியினால் இவ்வீதிதிருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## எல்லைப் பகுதி படைகள் உஷார் நிலையில்!

(பாங்கொக்)

தாய்லாந்து- வியட்னாமுடனான தனது எல்லைப்பிரதேசத்திலுள்ள படைகளை உஷார் நிலையில் வைத்துள்ளது.

வியட்நாம் தனது படை பலத்தை இப்பிராந்தியத்தில் அதிகரித்திள்ளதாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தாய்லாந்தின் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

வியட்நாமிலிருந்துவரும் எந்தவித தாக்குதலையிம் சமாளிக்க தாய்லாந்து இராணுவம் தயாராக உள்ளது என்று அந்த அதிகாரி கூறினார். (செ)

## சிறந்த பற்களுடைய 4 பாலர்கள் பரிசு பெற்றனர்

(பண்டத்தரிப்பு)

தேசிய சிறுவர் பற்சுகாதார வாரத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வட்டுகிழக்கு ஆரம்பசுகாதார கவனிப்பு அபிவிருத்திச்சபையுடன் இணைந்து சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில்நடாத்திய இலவச பற்பரிசோதனையில் சிறந்த பற்களுடைய நான்கு பாலர்பாடசாலைப் பிள்ளைகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விசேஷ பரிசுகள் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. உ. ந, தேவகடாச்சம், லயன்ஸ் வலயத்தலைவரும் வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு அபிவிருத்திச் சபைத் தலைவருமான டாக்டர் ரி. பகீதரன் ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த இலவச பற்பரிசோதனையில் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் 100 சிறுவர், சிறுமியருக்கு இலவச பற்பரிசோதனையும் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. சங்கானை அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த பல்வைத்தியர் டாக்டர் பி.லோகநாதன் இந்த பற்பரிசோதனையை நடாத்தினர் இதில் கலந்து கொண்ட சகல பிள்ளைகளுக்கும் இலவச பற்பசையும், பிறஸ்ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. வட்டு-கிழக்கு குடும்ப நலசேவையாளர் திருமதி டஞ்சலட்சு லல்லிபுரம் வட்டுக்கோட்டை சுகாதார பரிசோதகர் திரு. எஸ்; கருணனந்தன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

## "ஆரம்பக் கல்வியுடன் ஆங்கில போதனை அவசியம்"

[கரவெட்டி]

மாணவர்களின் ஆரம்பக் கல்வியாகவிருந்து உலகமொழியான ஆங்கிலக் கல்வியையும் போதிக்க ஆரம்பித்ததால் தான் மாணவர்கள் பூரண உலக அறிவைப்பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். என்று கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா கரவெட்டி பாலர் பாடசாலைக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்

திரு. எஸ். பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. தங்கராசா மேலும் பேசுகையில்: ''மாணவர்களின் ஆரம்பக்கல்வியோடு ஆங்கிலக்கல்வியையும் போதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆங்கிலம் சர்வதேச மொழிஎன்பதாலும் ஆங்கில மொழி மூலம் பலவற்றை நாம் தெரிந்துகொள்ளமுடியும் என்பதாலும் ஆங்கில கல்வி போதனை மாணவர்களுக்குமிக அவசியமாகும்'' என்றார்.

## பெருந்தன்மைக்கு பாராட்டு

(பண்டத்தரிப்பு)

சங்கானை நிற்சாமத்தில் உபமின்நிலையம் அமைப்பதற்கு தமக்குச் சொந்தமான காணியை சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த சின்னர் தங்கராசா என்பவர் இலவசமாக வழங்கியுள்ளார்.

நான்கு லட்சத்து 22ஆயிரம் ரூடா செலவில் நிறுவப்படவிருக்கும் இந்த புதிய உபமின் நிலையத்தை இங்கு அமைப்பதற்கு காணிபெறுவது மிகவும் கஷ்டமாக இருந்த வேளையில் மேற்படி அன்பர் தமது காணியை அன்பளிப்பாக வழங்க முன்வந்ததையிட்டு யாழ். அபிவிருத்திச்சபை சங்கானை பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. நா. குமாரசாமி அவருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

## பண்ணாகத்தில் விழிப்புக்குழு

[பண்டத்தரிப்பு]

பண்ணாகம் கிராமத்தில் திருட்டு, கொள்ளை, பயமுறுத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்குமுகமாக பண்ணாகம் கல்விகலைகலாச்சாரஒன்றியம் 5 பேரைக்கொண்ட விழிப்புக்குழுவொன்றை அமைத்துள்ளது. இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்றியத்தலைவர் திரு. வி. ஸ்ரீதரன் தலைமையில் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆசிரியர் திரு. ச. நமசிவாயம் குழுத்தலைவராகவும், பண்டிதர் ப. இராசகுரு செயலாளராகவும், திரு. சீ. வைரமுத்து, திரு. இ. தம்பிராசா, திரு. க. இராசரத்தினம் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்குழு தங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு 20 இளைஞர்களைக் கொண்ட கண்காணிப்பு படையொன்றை விரைவில் தெரிவுசெய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## மெல்போன் கிரிக்கட் ஆஸி: 210 - 8

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான 2ம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாளான நேற்று ஆட்ட நேரமுடிவின்போது அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

மெல்போன் மைதானத்தில் ஆரம்பமாகிய இப்போட்டியில் ஜெயித்த இந்திய காப்டன் கபில்தேவ் அவுஸ்திரேலிய அணியை ஆடுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்திய தரப்பில் ரவி சாஸ்திரி 4 விக்கெட்டுக்களையும் சிவராமகிருஷ்ணன், ஷிவ்லால் யாதவ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர். (செ)

## நூல் வெளியீடு

[சுழிபுரம்]

விஷ்ணுபக்தன் என். சிவகுருநாதனின் 'விஷ்ணு ஆழ்வார்கள்' நூல் வெளியீட்டுவிழா அடுத்தமாதம் 12ம் திகதி பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை காசிப்பிள்ளை

கைதடியை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்டவரும், [Labour Dept.], C.E E F.. J E D B. ஆகிய நிறுவனங்களில் உயர்தொழில் வகித்தவருமாகிய சங்கரப்பிள்ளை காசிப்பிள்ளை அவர்கள் 21-12-85ல் கொழும்பில் காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்பு கணவரும், பரமேஸ்வரன்(சிங்கப்பூர்), சிவதாசன் (Factory Officer Horana), யோகதாசன் (Barleet Electro Ltd.), லிங்கேஸ்வரி [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், ராணி, தயளினி ஆகியோரின் அன்பு மாமனும் கனகரத்தினத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-12-85 (வெள்ளிக்கிழமை) இன்று நண்பகல் 12 மணியளவில் 59, K. K. S. வீதி இல்லத்தில் நடைபெறும்

தகவல்: கு. கனகரட்ணம், வண்ணார்பண்ணை.

(2648)



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126